# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆவணி 26 செவ்வாய்க்கிழமை (11-09-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:289


# அமைச்சர்களின் எண்ணிக்கையை குறைப்பதில் ஜனாதிபதி திண்டாட்டம்!

## ஜே.வி.பியின் காலக்கெடு நாளை

கொழும்பு,செப்ரெம்பர்11

**தற்போதைய 44 அமைச்சர்களின் எண்ணிக்கையை இருபதாகக் குறைப்பதற்கு ஜே.வி.பி. விதித்த காலக்கெடு நாளை முடிவடைய இருக்கையில், அமைச்சர்களின் எண்ணிக்கையை குறைக்கமுடியாது ஜனாதிபதி குமாரதுங்க திண்டாடுவதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

தமது அமைச்சர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோரின் பதவிகளைப் பறிக்கவேண்டிய இக்கட்டில் சிக்கியிருக்கும் ஜனாதிபதி, யார், யாரைத் தொடர்ந்து அமைச்சரவையில் வைத்திருப்பது என்பது குறித்து பிரதமர் மற்றும் சிரேஷ்ட அமைச்சர்களுடன் தொடர்ந்து தீவிர ஆலோசனைகளை நடத்தி வருகின்றார்.

தற்போதைய அமைச்சர்களில் ஜனாதிபதிக்கு மிக நெருக்கமான - விசுவாசிகளான - ஓரிருவரைத் தவிர, ஏனையோர் அனைவரும் தாங்கள் கட்சியிலும் அரசிலும் முக்கியமானவர்கள் என்றும், தங்களுக்கு அமைச்சரவையில் இடமளிக்கப்படவேண்டும் என்பதில் உறுதியாக உள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

பெரும்பாலான அமைச்சர்களோடு முரண்பட்டு, அமைச்சரவையில் இடமளிக்காது, ஒதுக்கினால் ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்குள் பெரும் பிளவும் நெருக்கடியும் ஏற்படும் என ஜனாதிபதி அஞ்சுவதாகக் கூறப்படுகின்றது.

ஆனால் பொ.ஐ.மு. அரசுக்கு ஆதரவு வழங்க ஜே.வி.பி. விதித்த

(2ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பிரதேசத்துக்குச் செல்ல வங்கி அதிகாரிகளுக்கு அனுமதி மறுப்பு

வவுனியா,செப்.11

வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் இயங்கும் இலங்கை வங்கிக் கிளைகளின் செயற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக அங்கு செல்வதற்கு அனுமதி கோரி வங்கியின் ஐந்து அதிகாரிகள் வவுனியா படைத்தளத்தில் விண்ணப்பித்த போதும் -

வங்கியின் தலைமையக அதிகாரிகள் இருவருக்கு அனுமதி வழங்கப் படை அதிகாரிகள் மறுத்துவிட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளான மாங்குளம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் இயங்கும் வங்கியின் கிளைகளுக்கு நீண்டகாலமாக உயர் அதிகாரிகள் சென்று பிரச்சினைகளைக் கண்ட

(2ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.ஆஸ்பத்திரி வளவுக்குள் மண்டை ஓடுகள், எலும்புகள்

### நிலத்தைத் தோண்டியபோது வந்தன

யாழ்ப்பாணம்,செப்.11

யாழ்.ஆஸ்பத்திரிக்குள் புதிதாக அமைக்கப்படவிருக்கும் சவச்சாலைக் கட்டடத்துக்கு அத்திவாரம் வெட்டிய சமயம் அங்கு இரு மனித மண்டையோடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அத்திவாரம் வெட்டும் பணியில் ஈடுபட்ட தொழிலாளர்களே மண்டையோடுகளையும் எலும்புத்துண்டுகளையும் முதலில் கண்டனர்.

இத்தகவல் வைத்தியசாலை நிர்வாகத்துக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, முற்பகல் 11 மணியளவில் அத்திவாரம் வெட்டும் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டது.

கண்டெடுக்கப்பட்ட மண்டையோடுகள், எலும்புகள் பொலீஸாரின் மேற்பார்வையில் சட்டவைத்திய அதிகாரியினால் சேகரிக்கப்பட்டு அவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளன.

அந்தப்பகுதியில் மேலும் மனித எலும்புகள் காணப்படலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

(உ-3-10-ரி-139)

## குடாநாட்டின் கல்வி நிலை வீழ்ச்சி! எச்சரிக்கிறார் உலக வங்கி உயரதிகாரி

கொழும்பு,செப்.11

"யாழ்மாவட்டத்தில் கல்வி நிலை மிகவும் வீழ்ச்சி கண்டுவருகின்றது. இந்த நிலை நீடித்தால் எதிர்காலத்தில் புத்திஜீவிகள் உருவாவது தடைப்படும்."

- உலக வங்கி அதிகாரியான கலாநிதி மரியானா டொடொநோவா இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

உலக வங்கியின் கொழும்பு அலுவலகத்தில் தாம் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இப்படி அவர் எச்சரிக்கை ஒன்றை விடுத்தார்.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த உலகவங்கியின் குழுவுக்கு அவர் தலைமை தாங்கியிருந்தார்.

நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டில் ஒரு லட்சத்து 26 ஆயிரத்து 650 சிரேஷ்ட மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இவர்களுக்கு கல்வி போதிக்கத் தேவையான அளவு ஆசிரியர்கள் அங்கு இல்லை.

பாடசாலைகளில் போதிய தளபாடங்கள் இல்லை; உபகரணங்கள் இல்லை; பாடநூல்களும் போதியளவு வழங்கப்படவில்லை. அதனால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழகக் கல்வியும் திருப்திகரமானதாக இல்லை. கல்விப் போதனையை மேற்கொள்ளக் கூடிய விரிவுரையாளர்கள் இல்லை; மூத்த அனுபவம் வாய்ந்த பேராசிரியர்களும் இல்லை.

கல்விக் கல்லூரியும் அதே நிலையில்தான் உள்ளது.

கல்வி மேம்பாட்டுக்கு துரித அபிவிருத்தித்திட்டம் ஒன்று அவசரமாகத் தேவைப்படும் நிலையே அங்கு காணப்படுகின்றது.

சகல மட்டத்திலும் முயற்சி மேற்கொண்டு, கல்வி வீழ்சி நிலையை

(2ஆம் பக்கம் பார்க்க)

## எஞ்சிய 13 தமிழக மீனவரும் நேற்று விடுவிக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம்,செப்.11

இலங்கைக் கடற்பரப்புக்குள் ஊடுருவியதாகத் தெரிவித்து கைது செய்யப்பட்டு யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 13 இந்திய மீனவர்களை யாழ்.நீதிவான் ஆர்.ரி. விக்னராஜா நேற்று விடுதலை செய்து கடற்படை அதிகாரிகளிடம் கையளிக்கும்படி உத்தரவிட்டார்.

சட்டமா அதிபரின் அறிவுறுத்தலின்பேரில் விடுவிக்கப்பட்ட இந்த மீனவர்களை சர்வதேச கடற்பரப்பில் வைத்து இந்திய கடற்படையிடம் ஒப்படைக்க இலங்கைக் கடற்படை ஏற்பாடு செய்திருந்தது.

அண்மையில் கைது செய்யப்பட்டு யாழ்.சிறைச்சாலையில் தடுதது வைக்கப்பட்டிருந்த 55 இந்திய மீனவர்கள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இறுதித் தொகுதியான 13 மீனவர்களும் நேற்று விடுதலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(உ-3-4-10-ரி)

## வடக்கில் விவசாய நிலங்களில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடி அகற்றும் திட்டத்துக்கு உலக வங்கி நிதி உதவி வழங்கும்!

கொழும்பு,செப்.11

வடக்கில் விவசாய நிலங்களில் உள்ள நிலக்கண்ணிகள் மற்றும் மிதிவெடிகளை அகற்றி அந்நிலங்களை பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்த வழிசெய்யும் - ஐ.நா. தலைமையிலான - திட்டத்துக்கு நிதி உதவி வழங்குவது குறித்து உலக வங்கி தீவிரமாக ஆலோசித்து வருகிறது.

இலங்கைக்கான உலக வங்கி அலுவலகம் நேற்று இதனைத் தெரிவித்தது.

வடக்கில் விவசாய நிலங்களில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்றி, அந்த நிலங்களை உடனடியாக விவசாய நடவடிக்கைகளுக்கு பெற்றுக்கொடுக்கும், திட்டத்தை 1999ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஐ.நா. ஆரம்பித்திருந்தது. ஆனால் கடந்த ஆண்டு வட பிராந்தியத்தில் போர் நடவடிக்கைகள் தீவிரமடைந்ததால் இந்தத் திட்டம் இடைநிறுத்தப்பட்டது.

ஐ.நாவின் இந்தத் திட்டம் தொடர்பான யோசனைகள் தற்போது மதிப்பிடப்பட்டு வருவதாகவும் -

இது தொடர்பான இறுதி முடிவும் நிதி உதவியின் அளவு பற்றிய தீர்மானமும் 3 அல்லது 4 மாதங்களுக்குள் எடுக்கப்படும் எனவும் உலக வங்கிப் பேச்சாளர் தெரிவித்தார்.

அத்துடன் வடக்கு - கிழக்கில் நீர்பாசனத் திட்டங்களைப் புனர

(2ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனரல் நீல் டயஸ் அமெரிக்காவுக்கு!

கொழும்பு,செப்.11

வடக்கின் முதல் படை நடவடிக்கைகளுக்கான கட்டளை அதிகாரியும் இராணுவத்தின் சிரேஷ்ட தலைமை அதிகாரியுமான மேஜர் ஜெனரல் நீல் டயஸ் பாதுகாப்பு முகாமைத்துவ சிரேஷ்ட அதிகாரிகளுக்கான கற்கை நெறி ஒன்றைப் பயிலுவதற்காக இன்று அமெரிக்காவுக்குச் செல்லவுள்ளார்.

கலிபோர்னியா நகரில் உள்ள சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளுக்கான பயிற்சிக் கல்லூரியில் இந்த மூன்று மாத கற்கைநெறியை அவர் தொடர்வார்.

(உ-3)

## மாளிகாவத்தையில் நேற்று 2ஆம் நாளாக சூட்டுச் சம்பவம்

### மூவர் பலி; மூவர் காயம்

கொழும்பு,செப்.11

மாளிகாவத்தை பள்ளிவாசல் பகுதியில் கடந்த இரு தினங்கள் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் மூவர் கொல்லப்பட்டனர்; மூவர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் மாலை 4.45 மணியளவில் இடம்பெற்ற சூட்டுச் சம்பவத்தில் ஒருவரும் -

நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்ற சூட்டுச் சம்பவத்தில் இருவரும் - உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவங்களில் காயமடைந்த மூவர் கொழும்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாதாள உலகக் கோஷ்டிகளுக்கு இடையில் அந்தப் பகுதியில் இடம்பெற்ற சூட்டுச் சம்பவங்களிலேயே இவர்கள் உயிரிழந்தனர் என்று மாளிகாவத்தைப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.ஐ.ஏ. சுரவீர தெரிவித்தார்.

(உ-3-7-9)

## தேர்தலின் பின் நோர்வேயில் தொங்கு நாடாளுமன்றம்?

ஒஸ்லோ,செப்.11

நோர்வே நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியாகிக் கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில், இலங்கைப் பிரச்சினையில் மீண்டும் எரிக் சொல்ஹெய்மின் பங்களிப்பு மற்றும் ஆதிக்கம் அதிகரிக்கக் கூடுமென்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இத்தேர்தலில் எந்தக் கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெற வாய்ப்பு இல்லை என்று முற்கொண்டு கிடைதத செய்திகள் தெரிவிக்கின்றன.

எரிக் சொல்ஹெய்மின் கட்சி கடந்த தடவை ஆட்சியில் இருக்காததால், இலங்கை அரசு, நோர்வே அரசுடன் தொடர்புகொண்டு சமாதான முயற்சிகளில் இருந்து அவரை இலகுவாக ஓரங்கட்ட முடிந்தது என்று அரசியல் அவதானி ஒருவர் சுட்டிக்காட்டினார்.

165 ஆசனங்களைக் கொண்ட நோர்வே நாடாளுமன்றத்தில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காமல் போகும் தற்போதைய நிலையில் சில வருடங்களுக்கு அங்கு 'தொங்கு அரசு' ஒன்றே அமையுமென்று கணிக்கப்படுகிறது.(உ-ஒ)

### பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்

# கைதானோரை உறவினர் சந்திக்க வாரத்தில் ஆறு நாள்கள் அனுமதி

கொழும்பு,செப்.11

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை அவர்களின் உறவினர்கள் சந்திப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் உபாலி சமரவீர இதனைத் தெரிவித்தார்.

முன்னர் வாரத்துக்கு ஒரு முறை மட்டுமே உறவினர்கள், தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களைச் சந்திக்க அனுமதிக்கப்பட்டதாகவும் -

புதிய அறிவிப்பின்படி ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாள்களில் உறவினர்கள் கைதிகளைச் சந்திக்க முடியுமென்றும் -

இம்மாதம் 7ஆம் திகதியிடப்பட்ட வர்த்தமானியில் இதற்கான அறிவிப்பு வெளியாகியுள்ளதாகவும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

(உ-ஒ-9)

### அமைதி முயற்சி தொடர்பாக

# நோர்வேத் தூதருடன் கதிர்காமர் ஆலோசனை

கொழும்பு,செப்.11

நோர்வேயின் சமாதான முயற்சிகளை மீண்டும் தொடர்வதற்கான சாத்தியம் குறித்து வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் கொழும்பில் உள்ள நோர்வேத் தூதருடன் நேற்று இரு தடவைகள் சந்தித்துக் கலந்துரையாடியதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதில் முக்கிய பங்கு வகித்த நோர்வே, தனது பணியில் இருந்து சற்று விலகியிருந்த நிலையில் -

மீண்டும் இந்தப் பணியில் நோர்வேயை ஈடுபடுத்த அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் மும்முரமாக ஈடுபட்டுள்ளார் என்று அந்தச் செய்தி ஏஜென்ஸி தெரிவித்தது.

நேற்றைய சந்திப்பின் போது பேச்சுக்களை ஆரம்பிக்கக் கூடிய சூழ் நிலையை நோர்வே உருவாக்க வேண்டும் என்று கோரப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நோர்வேயின் தலையீட்டை வெளிப்படையாக எதிர்த்துவரும் ஜே.வி.பியுடன் கூட்டு வைத்துக்கொண்டு, சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதாக அரசு காட்டும் ஆர்வம், தமிழ் மக்களை ஏமாற்றும் கபடநாடகத்தின் ஓர் அங்கமே என்று தமிழ்க் கட்சிகள் கூறியுள்ளன. (உ-3)

## களுவாஞ்சிக்குடியில் தேடுதல்

மட்டக்களப்பு,செப்.11

மட்டக்களப்பு மாவட்டத்தில் களுவாஞ்சிக்குடி பகுதி நேற்றுக்காலை 10 மணிக்குப் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

இந்தத் தேடுதலில் நூறு பேர் கைது செய்யப்பட்டனர். கடும் விசாரணையின் பின்னர் ஒருவரைத் தவிர ஏனையோர் விடுவிக்கப்பட்டனர்.

## வவுனியாவில் 2 இளைஞர்கள் தடுப்புக்காவலில்

வவுனியா,செப்.11

வவுனியா வாரிக்குட்டியூரைச் சேர்ந்த கனகசுந்தரம் சாந்தகுமார் (வயது 23), சிவபுரத்தைச் சேர்ந்த செல்வராஜா காந்தரூபன் (வயது 32) ஆகியோரைத் தாம் கைது செய்து தடுத்து வைத்துள்ளதாக கிளர்ச்சித் தடுப்புப் பொலீஸார் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா அலுவலகத்துக்கு தெரிவித்துள்ளனர்.

இருவரும் தொடர்ந்து விசாரிக்கப்பட்டு வருவதாகவும் பொலீஸார் அறிவித்துள்ளனர்.

(ஒ)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றிந்து தீர்வுகளைத் தருவதில்லை என முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இதையடுத்து தலைமையக அதிகாரிகளான க.பாலசுப்பிரமணியம், இ.ரவீந்திரன் ஆகியோர் வவுனியா கிளையைச் சேர்ந்த மூன்று அதிகாரிகளுடன் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்குச் செல்வதென முடிவு செய்யப்பட்டிருந்தது.

இதன்படி தலைமையக அதிகாரிகள் இருவரும் வவுனியாவுக்கு கடந்த 5ஆம் திகதி வந்தனர்.

அன்றே அவர்களுக்கு வவுனியா கிளை அதிகாரிகளும் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்குச் செல்ல அனுமதி கோரி விண்ணப்பத்தை வவுனியா படைத்தளத்திடம் கையளித்தனர்.

தலைமையக அதிகாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. வவுனியா அதிகாரிகளுக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டது.

அதையடுத்து வவுனியா கிளை அதிகாரிகள் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்குச் சென்றனர்.

தலைமையக அதிகாரிகள் இருவரும் அனுமதி கிடைக்காததால் இன்னமும் வவுனியாவிலேயே தங்கியுள்ளனர்.

வவுனியா அரச அதிபர் மூலம் பாதுகாப்பு அனுமதியைப் பெறுவதற்கு அவர்கள் முயற்சி மேற்கொண்டுள்ளனர் அனுமதி கிடைக்கும் பட்சத்தில் அவர்கள் அங்கு செல்வர் என தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

## அமைச்சர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிபந்தனைகளின் படியும் -

அதற்கு அரசுத் தரப்பிலிருந்து வழங்கப்பட்ட இணக்கத்தின் படியும்-

நாளைய தினத்துக்கு முன்னர் இருபது பேருக்கு மேற்படாத அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவையை ஜனாதிபதி குமாரதுங்க அறிவித்தாக வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

உள்கட்சி முரண்பாடு மற்றும் குழப்பங்கள் காரணமாக இது விடயத்தில் திட்டவட்டமான முடிவை எடுக்க முடியாது ஜனாதிபதி திண்டாடுவதாகவும் கூறப்படுகின்றது.

அதேவேளை -

பன்னிரண்டுக்கும் பதினாறுக்கும் இடைப்பட்ட எண்ணிக்கையைக் கொண்ட முதலாவது தொகுதி அமைச்சர்களின் பட்டியலை ஜனாதிபதி இன்று வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அடுத்த தொகுதி அமைச்சர்களின் பட்டியல் பின்னர் வெளியிடப்படவிருக்கின்றது.

இப்படி மீதியாக சில அமைச்சுப் பதவிகளை அறிவிப்பதைத் தள்ளிப் போடுவதன்மூலம், பதவியிலிருப்பவர்கள் எஞ்சிய அமைச்சர் பதவிகளில் ஒன்று கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் இருக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்க அரசு உயர்மட்டம் கருதுவதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

# புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் மருந்துகளுக்குப் பற்றாக்குறை

வவுனியா,செப்.10

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பிரதேசத்தில் உள்ள மருத்துவமனைகளில் மருந்துப் பொருள்களுக்கு பெரும் பற்றாக்குறை நிலவுவதாகக் கூறப்படுகிறது.

இந்த வருடத்தின் மூன்றாம் காலாண்டுக்கான மருந்துகள் மற்றும் மருத்துவப் பொருள்கள் இதுவரையும் கிடைக்கப் பெறவில்லை என்றும் -

இதனால் நோயாளிகள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கியிருப்பதாகவும் -

துணுக்காய் உட்பட பல மருத்துவமனைகளில் 'பனடோல்' மாத்திரைகள் கூடக் கிடைப்பதில்லை என்றும் - தெரிவிக்கப்பட்டது.

விரைவில் மருந்துப் பொருள்கள் அனுப்பி வைக்கப்படாவிட்டால் உயிரிழப்புகள் ஏற்படும் அபாயம் உள்ளதாக அஞ்சப்படுகிறது.

(ஒ)

# மாட்டிறைச்சிக் கடைகளுக்கு வலி. மேற்கில் மூடுவிழா!

### பிரதேச சபைத் தலைவர் தகவல்

யாழ்ப்பாணம்,செப்.11

வலி.மேற்குப் பகுதியில் இயங்கும் சகல மாட்டிறைச்சிக் கடைகளையும் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவரும் ஈ.பி.டி.பி. அமைப்பின் இந்துசமய விவகாரப் பொறுப்பாளருமான என்.திரிலோகநாதன் தெரிவித்தார்.

வட்டுக்கோட்டை, சங்கரத்தை பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் நேற்று இடம்பெற்ற கும்பாபிஷேக நிகழ்வில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

அந்த விழாவில் பங்குபற்றியோர் இது தொடர்பாக விடுத்த கோரிக்கைக்குப் பதில் அளிக்கையிலேயே அவர் இப்படிக் கூறினார். (உ-3)

## புலிகளின் படகுகள் பிடிபட்டனவாம்

கொழும்பு,செப்.11

திருகோணமலை கோணேஸ்வரர் ஆலயக் கடற்பகுதியில் விடுதலைப் புலிகளின் படகுகளை மடக்கிய கடற்படையினர், ஒருவரையும் கைது செய்துள்ளதாக விசேட ஊடகத்தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை அதிகாலை 4.40 மணியளவில் சந்தேகத்துக்கிடமான படகுகள் சிலவற்றைக் கண்ட கடற்படையினர், அவற்றை அண்மித்ததாகவும் -

அப்போது, அந்தப் படகுகளில் இருந்தவர்கள் கிரனேட்டுக்களை வசியதாகவும் - பின்னர் கடலில் குதித்து நீந்தித்தப்ப அவர்கள் முயற்சித்ததாகவும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ)

## கண்ணிவெடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைக்க உதவிகள் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உலகில் கம்போடியா மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளையடுத்து கண்ணிவெடியால் பாதிக்கப்படுபவர்கள் அதிகமுள்ள நாடு இலங்கை என்பது குறிப்பிடத்தக்கது.

(உ-ஒ)

## குடாநாட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிவர்த்தி செய்யவேண்டியது அவசியமாகும்.

புத்திஜீவிகளின் உருவாக்கம் குறைந்துகொண்டே போகின்றது. இந்த நிலையை சீராக்க உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அத்துடன் அங்குள்ள மக்களின் அன்றாட வாழ்க்கையும் பெரிதும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

பருவம் அடைந்த பிள்ளைகளுக்கும் போதிய பாதுகாப்பும் இல்லை. 15க்கும் 17க்கும் இடைப்பட்ட பெண்கள் திருமணமாகாமல் கர்ப்பம் தரிக்கும் நிலையும் காணப்படுகின்றது.

யாழ்.குடாநாட்டில் மீன்பிடித்தடை அமுல் செய்யப்பட்டுள்ளதால் மீனவர்களின் வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. ஆனால் நெடுந்தீவுப் பகுதியில் இந்திய மீனவர்கள் ஊடுருவி சுதந்திரமாக மீன் பிடிக்கின்றனர்.

குடாநாட்டு மக்களின் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதற்கு தரைவழிப்பாதை ஒன்று திறக்கப்பட வேண்டும் அதுவே அவசியமானதொன்றும் ஆகும் - இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (உ-3)


## பிறந்த நாள் வாழ்த்து

அச்சுவேலி, பத்தமேனி தீர்த்தாங்குள விநாயகர் கோயிலடியைச் சேர்ந்த பா.சோமசுந்தரக்குருக்கள் - சவிதா தம்பதிகளின்

செல்வப்புதல்வி

ஸ்ரீ வர்சினி

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (11.09.2001) செவ்வாய்க்கிழமை வதிரி அம்பாள் வீதியில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை மாமா, பவானி மாமி, கவிதா மச்சாள், ஹம்ஸா மச்சாள் ஆகியோர் கற்பகப் பிள்ளையார் அருள்பெற்று, பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

இருபாலை, கோப்பாய். (92171)

சிவஸ்ரீ பா.செல்வசேனக்குருக்கள் (குடும்பம்)



## சுடர் ஒளி 16.09.2001 இதழில்

- புலிகளின் ஆயுதக் குவிப்பில் பொதுமக்கள் பேருதவி; கிழக்கில் பலத்த ஆயத்தங்கள்; படையினரும் உஷார் நிலையில்!
- பருத்தித்துறைக் கடலில் பலியான தற்கொலையாளியின் இலக்கு எது?
- குடாநாட்டில் சீருடையினரைக் கலக்கும் தொலைபேசி அழைப்புக்கள்!
- "போராட்டத்துக்கு மக்கள் ஆதரவு பெருகி வருகிறது; பெற்றோரே பிள்ளைகளைத் தருகிறார்கள்" என்கிறார் கரிகாலன்
- இரு தரப்பினரும் 'ரெடி'; ஆரம்பமாவதே பாக்கி! குடாநாட்டைத் தாக்குவதும் காங்கேசன் துறைமுகத்தைப் பிடிப்பதும் ஒன்றே!
- யுத்தத்தில் தோல்விக்கு வெகுமதி தூதுவர் பதவி
- பொ.ஐ.மு. - ஜே.வி.பி. கூட்டு ஒரு வசதிக் கல்யாணம்; நாட்டுக்கு அதனால் கேடு!
- மற்றும் சுவையான அம்சங்களுடன்.

(C/18222)

வாசிக்கும் நெஞ்சங்களை யோசிக்க வைக்கும் ஒரே பத்திரிகை


# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் பாலசுப்பிரமணியம்

(உதவி நில அளவை அத்தியட்சகர், அநுராதபுரம்)

எழுதுமட்டுவாளைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பாலசுப்பிரமணியம் நேற்று (10-09-2001) திங்கட்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா ஆறுமுகம், ஆறுமுகம் சின்னம்மா ஆகியோரின் சிரேஷ்ட புத்திரனும் தங்கலட்சுமியின் அன்புக் கணவரும், மணிவண்ணன் (இறுதி வருடம் பொறியியல் பிரிவு - பேராதனை), தாரணி (கணிய அளவையியலாளர் - கொழும்பு), மைதிலி (3ஆம் வருடம், மருத்துவ பீடம் - யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சோதிலிங்கம் (உப அதிபர் - இரத்மலானை இந்துக் கல்லூரி), பூபதியம்மா (பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர் - தென்மராட்சி), சுந்தரலிங்கம்(பதவி நிலை உத்தியோகத்தர், தபால் திணைக்களம்-யாழ்ப்பாணம்), மனோரஞ்சிதம் (மருந்தாளர் - யாழ்.போதனா வைத்தியசாலை), அமிர்தலிங்கம் (கனடா), யோகலிங்கம் (கனடா) ஆகியோரின் சகோதரனும் திலகவதி(இளைப்பாறிய ஆசிரியர்), கைலைநாதன் (அதிபர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ஸ்ரீரங்கநாயகி (ரெலிக்கொம், யாழ்ப்பாணம்), சிவராஜா (ஆசிரியர் - இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்), நந்தினி (கனடா), சுகந்தி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

ஆ.சுந்தரலிங்கம் (சகோதரர்)
49,அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. NO:- 2682

பூந்தோட்டம், வவுனியா.
T.P. NO:- 072- 679545
(92170)

## திருமதி வேலுப்பிள்ளை ஆச்சிமுத்து

மீசாலை கிழக்கை வதிவிடமாகவும் கல்வியங்காடு, ஜி.பி.எஸ். வீதியைத் தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை ஆச்சிமுத்து நேற்றிரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசிரியர் வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தணபாலசிங்கம் மற்றும் ஏரம்பமூர்த்தி, சடாச்சரமூர்த்தி (மின் அத்தியட்சகர், சாவகச்சேரி), குமாரமூர்த்தி ஆகியோரின் தாயாருமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று (11.09.2001) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு திருநெல்வேலி இந்து மயானத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

வே.குமாரமூர்த்தி (மகன்)

ஜி.பி.எஸ். வீதி, கல்வியங்காடு.

(C/18227)

# பிஜியின் புதிய பிரதமராக லெய்ஸனியா பதவியேற்பு

சுவா,செப்.11

பிஜியின் புதிய பிரதமராக லெய்ஸனியா நேற்றுப் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

தலைநகர் சுவாவில் இடம்பெற்ற எளிமையான நிகழ்வு ஒன்றில் நாட்டின் ஜனாதிபதி பிரதமருக்கும் உறுப்பினர்களுக்கும் பதவிப் பிரமாணம் செய்துவைத்தார்.

இன்னும் 5 ஆண்டுகளுக்கு லெய்ஸனியா தலைமையிலான அரசு ஆட்சியில் இருக்கும். பிரதமர் அவரது அரசு குறித்து இன்னும் அறிவிக்கவில்லை.

நாடாளுமன்றில் பிரதமரின் கட்சிக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை என்பதால் பிரதமர் சிறுபான்மை அரசை அமைப்பாரா அல்லது ஜோர்ஜ் ஸ்பெயிட்டின் கென்சர் வேட்டிங் கட்சியுடன் இணைந்து கூட்டணி அரசு ஒன்றை அமைப்பாரா என்பது குறித்து இதுவரை தெளிவான கருத்து எதுவும் வெளியிடப்படவில்லை.

லெய்ஸனியா பிஜியின் பிரதமராக மூன்றாவது தடவையாக பதவி யேற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-9)

# பிஜியின் புதிய அரசில் சேர்வதற்கு மகேந்திரசௌத்திரி இணக்கம்

சுவா,செப்.11

பிஜியில் புதிய பிரதமராகப் பதவி யேற்றுள்ள லெய்ஸனியா தலை



மையிலான அரசில் பங்கு கொள்ளுமாறு விடுக்கப்பட்ட அழைப்பை முன்னாள் பிரதமர் மகேந்திர சௌத்திரி ஏற்றுக்கொண்டுள்ளார்.

கலகத்தால் பாதிக்கப்பட்ட பிஜி போன்ற ஒரு நாட்டை நிர்வகிப்பது கடினம் என்பதை உணர்ந்துள்ளதால் லெய்ஸனியா தனது அரசில் சேருமாறு விடுத்த அழைப்பைத் தான் ஏற்றுக்கொண்டுள்ளதாக மகேந்திர சௌத்திரி தலைநகர் சுவாவில் நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

பிஜியின் 1997 ஆம் ஆண்டு பல இனத்தவர் அரசமைப்பின் பிரகாரம், குறைந்தது எட்டு இடங்களில் வெற்றி பெறும் கட்சியை அரசில் சேருமாறு நாட்டின் பிரதமர் அழைக்க வேண்டும் என்பது நியதி. அந்த அடிப்படையிலேயே அரசில் சேருமாறு பிரதமர் லெய்ஸனியா மகேந்திர சௌத்திரிக்கு அழைப்பு விடுத்திருந்தார். (ம)

# அகதிகள் நுழைவதைத் தடுக்க ஆஸ்திரேலியாவில் புதிய சட்டம்

மெல்பேர்ன்,செப்.11

சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் ஆஸ்திரேலியாவிற்குள் கடல் வழியாக நுழைவதைத் தடுப்பதற்காக சர்ச்சைக்குரிய சட்டமொன்றைக் கொண்டுவரும் முயற்சியில் பிரதமர் ஜோன் ஹவார்ட் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

அண்மையில் ஆஸ்திரேலியாவுக்குள் நுழைய முயன்ற 434 ஆப்கானிஸ்தான் மற்றும் இலங்கை, இந்தோனேஸிய அகதிகளை ஏற்றுக் கொள்வதற்கு ஆஸ்திரேலிய அரசு மறுப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து, அகதிகள் விவகாரத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்குடன் பிரதமர் இந்தப் புதிய சட்டத்தைக் கொண்டுவருவதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படவுள்ள புதிய சட்டத்தின் மூலம் கிறிஸ்மஸ் தீவும், ஆஸ்மோர் தீவும் ஆஸ்திரேலியாவின் குடிவரவு பகுதியிலிருந்து விலக்கப்படலாம் எனவும் -

இதன்மூலம் இந்தப் பகுதிக்குள் பிரவேசித்தவர்களுக்கு அரசியல் அந்தஸ்துக் கோருவதற்கு முன்னர் இருந்த உரிமைகள் விலக்கப்படலாம் எனவும் -

பிரதமர் ஹவார்ட் தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

ஆஸ்திரேலியாவை நோக்கி வந்துகொண்டிருந்த சட்டவிரோதக் குடியேற்றவாசிகளை ஏற்றிய இரு படகுகளைச் சர்வதேச கடற்பரப்பில் தடுத்து நிறுத்தியுள்ளதாக அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் அலெக்ஸாண்டர் டவுனர் தெரிவித்துள்ளார்.

அஸ்மோர் தீவுப்பகுதிக்கு அருகில் 237 சட்டவிரோத குடியேற்றவாசிகளுடன் பயணித்துக்கொண்டிருந்த இரு படகுகளை ஆஸ்திரேலியக் கடற்படையினர் தடுத்து நிறுத்தியதாகவும் -

பின்னர் அவர்கள் ஆஸ்திரேலிய துருப்புக்காவிக் கப்பலான எச்.எம்.ஏ. எஸ்.மனுராவிற்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் - டவுனர் தெரிவித்தார்.

இரு வாரங்களுக்கு முன்னர் நோர்வேயின் சரக்குக் கப்பலொன்றை வற்புறுத்தி ஆஸ்திரேலியாவுக்குள் நுழையமுயன்ற 434 சட்டவிரோதக் குடியேற்றவாசிகளுடன் எச்.எம்.ஏ. எஸ்.மனுரா நியூஸிலாந்துக்குப் புறப்பட்டுள்ளமை தெரிந்ததே. அவர்களுடன் சேர்த்தே தற்போதைய இரு படகுகளில் இருந்தவர்களும் அக் கப்பலில் ஏற்றப்பட்டுள்ளனர்.

நோர்வே கப்பலிலிருந்தவர்களுக்கு நியூஸிலாந்திலும், நோருவிலும் அடைக்கலம் அளிக்கப்படவுள்ளது. எனினும் இறுதியாகக் கைப்பற்றப்பட்ட படகிலிருந்தவர்களுக்கு என்ன நடைபெறப்போகின்றது என்பது குறித்து இதுவரை ஆஸ்திரேலியா எதனையும் தெரிவிக்கவில்லை.



வெனிஸில் இடம்பெற்ற 58ஆவது சர்வதேச திரைப்பட விழாவில் 'தங்கச் சிங்கம்' விருது வென்ற இந்திய திரைப்பட இயக்குநர் மீரா நாயர், விருது பெற்ற பின்னர் எடுக்கப்பட்ட படம் இது. 'மொன்சூன் வெடிங்' என்ற படத்துக்காக இவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

# இரு வட இந்திய மாநிலங்களில் கடும் மழையால் 20 பேர் பலி!

## உதவிப் பணியில் இராணுவம் ஈடுபட்டுள்ளது

புதுடில்லி,செப்.11

இந்தியாவின் உத்தரப் பிரதேசம் மற்றும் பீஹார் மாநிலங்களில் கடந்த சில நாள்களாகப் பெய்து வரும் கடும் மழையினால், கடும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. வெள்ளத்தில் சிக்கி இதுவரை சுமார் 20 பேர் உயிரிழந்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

350க்கும் மேற்பட்ட கிராமங்கள் வெள்ளம் காரணமாக மாநிலத் தலைநகரங்களுடனான தொடர்புகளை இழந்துள்ளன.

. ஆயிரக்கணக்கான மக்கள் தமது வீடுகளை விட்டு இடம்பெயர்ந்து வேறு இடங்களில் தங்கி உள்ளனர்.

வெள்ளத்தால் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் மக்களை மீட்கவும் அவர்களுக்கு உணவுப் பொருள்கள் மற்றும் உதவிகளை வழங்கவும் இராணுவம் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க மத்திய, மாநில அரசுகள் தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளன.

தொடர்ந்து பெய்து வரும் மழையால் பீஹாரில் உள்ள அனைத்து ஆறுகளிலும் கரையை மீறி வெள்ளம் பாய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை -

இந்தியாவின் தென்பகுதி மாநிலங்களில் கடும் வறட்சி நிலவி வருகின்றது. இதனால் காவிரி நதியின நீரைத் திறந்து விட கர்நாடக மாநிலம் மறுத்து வருகின்றது. காவிரி பாசனத்தை நம்பி தமிழகத்தில் பயிரிடப்பட்ட பெருமளவு பயிர்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன. (ம-9)

# இஸ்ரேலின் தாக்குதல்களை நியாயப்படுத்தும் அமெ. அமைச்சர்

பலஸ்தீனர்கள் வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அவர்களைத் திருப்பித் தாக்குவதைத் தவிர வேறுவழியில்லை என்று அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் டொனால்ட் றம்ஸ்வி தெரிவித்துள்ளார்.

அண்மையில் இஸ்ரேலியப் பகுதியில் பலஸ்தீனர் ஒருவர் நடத்திய தற்கொலைத் தாக்குதலுக்கு இஸ்ரேல் கொடுத்த பதிலடியைக் குறிப்பிட்டுப் பேசியபோதே, அமெரிக்க அமைச்சர் இஸ்ரேலின் செயலை நியாயப்படுத்தும் மேற்கண்ட கூற்றைத் தெரிவித்தார்.

பலஸ்தீனர்கள் தற்கொலைத் தாக்குதல் உத்தியைக் கையாள்கிறார்கள். எனவே தற்கொலைத் தாக்குதல்கள் மீண்டும் நடைபெறாமல் தடை செய்ய வேண்டுமாயின் அதற்குக் காரணமானவர்களைத் தேடி அழிக்க வேண்டிய கட்டாயம் இஸ்ரேலுக்கு உள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-9)

# அரபாத் - ஷிமோன் பெரஸ் பேச்சுப்பற்றி அரபு லீக் அவசரமாகக் கூடி ஆராய்வு

பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்துக்கும் இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் ஷிமோன் பெரஸுக்கும் இடையில் இந்த வாரம் நடைபெற உள்ள பேச்சுக் குறித்து அரபு லீக் அவசரமாகக் கூடி ஆராய்ந்துள்ளது.

மத்திய கிழக்கில் பலஸ்தீனர்களின் வன்முறைகளை நிறுத்த வேண்டும் எனின் இஸ்ரேலை அமெரிக்கா கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும் என்று இந்தக் கூட்டம் பரிந்துரைத்துள்ளது.

கூட்டத்தை ஆரம்பித்து வைத்துப் பேசிய கட்டார் நாட்டு வெளிவிவகார அமைச்சர் -

"பலஸ்தீன மக்களுக்கு எதிரே அடக்குமுறை மற்றும் வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிடும் இஸ்ரேலிய அரசின் உண்மையான முகம் அண்மையில் அது பலஸ்தீனர்கள் மீது நடத்திய தாக்குதல்களின் மூலம் வெளி உலகுக்குத் தெரியவந்துள்ளது" - என்று தெரிவித்தார். (ம-9)

# வட - தென் கொரியாக்கள் இடையே அடுத்த வாரம் மீண்டும் பேச்சு ஆரம்பம்

சியோல்,செப்.11

வடகொரியாவுக்கும் தென் கொரியாவுக்கும் இடையே அடுத்த வாரம் மீண்டும் பேச்சுகள் ஆரம்பமாகவுள்ளன. பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க விரும்பம் தெரிவித்து வடகொரியா விடுத்த அழைப்பை தென்கொரியா ஏற்றுக்கொண்டுள்ளது.

பேச்சுக்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை தென்கொரியாவின் தலைநகர் சியோலில் நடைபெறும்.

அமைச்சர்கள் மட்டத்திலேயே இந்தச் சந்திப்பு நடைபெறும்.

இரு நாடுகளுக்கும் இடையே நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்காகவே பேச்சுகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுகின்றன என்று தென்கொரியா விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



வியட்நாமுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள சீன சபாநாயகர் லீ பெங் வியட்நாம் பிரதமர் ராங் டியூ லூங்கை ஹனோயிலுள்ள பிரதமர் மாளிகையில் சந்தித்துக் கை குலுக்கிய போது எடுக்கப்பட்ட படம் இது.

லீ பெங் நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயமாக கடந்த 7ஆம் திகதி வியட்நாம் போய்ச் சேர்ந்தார். இரு நாட்டு உறவுகளையும் மேம்படுத்தும் நோக்குடன் அவரது இந்த விஜயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம)

# உலகில் மனித உரிமைகளைப் பேண முக்கிய நடவடிக்கைகள் தேவை

டேர்பன்,செப்.11

உலகில் மனித உரிமைகள் பேணப்படுவதற்கு சில முக்கிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று தென்னாபிரிக்காவின் டேர்பன் நகரில் இடம்பெற்ற இனவாதத்துக்கு எதிரான மாநாடு தனது இறுதி அறிக்கையில் யோசனை தெரிவித்துள்ளது.

இந்த யோசனைகள் நடைமுறைப் படுத்தப்படுவதிலேயே மாநாட்டின் வெற்றி தங்கியுள்ளது என்று மனித உரிமைகள் அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இதேவேளை -

மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட யோசனைகளை அனைத்து நாடுகளும் நடைமுறைப்படுத்தவேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தின் தலைவி கே. றொபின்சன் கேட்டுள்ளார். (ம-9)

# போதைவஸ்து கடத்தலை முறியடிக்க பிலிப்பைன்ஸ் அதிபர் அறைகூவல்

மணிலா,செப்.11

பிலிப்பைன்ஸில் பெருகி வரும் போதைவஸ்து வியாபாரத்தை உடனடியாகத் தடுத்து நிறுத்தவில்லையாயின், நாடு ஆசியாவின் கொலம்பியா ஆகிவிடும் என்று ஜனாதிபதி அரோயா குளோரியா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நாட்டு மக்களுக்கு அவர் அவசர அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

போதைவஸ்து வியாபாரம் மற்றும் கடத்தலுக்கு எதிராக அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றது. எனினும் அதனைக் கட்டுப்படுத்த சர்வதேச ஒத்துழைப்புத் தேவை.

உடனடியாக இது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படாவிட்டால் பிலிப்பைன்ஸ் ஆசியாவின் கொலம்பியா ஆகிவிடும். லத்தீன் அமெரிக்க நாடான கொலம்பியாவில் போதைப்பொருள் கடத்தல்காரர்களே அதிகாரத்தில் உள்ளவர்களை நிர்ணயிக்கிறார்கள். அந்த நிலை பிலிப்பைன்ஸில் ஏற்பட இடமளிக்க முடியாது.

எனவே போதைவஸ்து வியாபாரத்தை ஒழிக்கும் நடவடிக்கையில் ஜனாதிபதி என்ற முறையில் எனக்குள்ள முழு அதிகாரங்களையும் நான் பயன்படுத்துவேன்.

- என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

# பொ.ஐ.மு. அதிருப்தியாளர்களை ஒன்றிணைத்து புதிய அணியை உருவாக்க எதிர்க்கட்சிகள் முயற்சி

## தேர்தலில் யானைச் சின்னத்தில் போட்டியிடுவது குறித்தும் ஆலோசனை

கொழும்பு, செப். 11

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியிலுள்ள அதிருப்தியாளர்களை ஒன்றிணைத்து 'ஐக்கிய மக்கள் முன்னணி' என்ற பெயரில் புதிய அணி ஒன்றை அமைக்க எதிர்க்கட்சிகள் முயற்சி செய்து வருவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

தற்போதைய அரசியல் சூழ்நிலையில் விரைவில் பொதுத்தேர்தல் நடைபெறலாம் எனக் கருதும் எதிரணிகள் 'ஐக்கிய மக்கள் முன்னணி' என்ற பெயரில் தேர்தலில் போட்டியிட எண்ணியுள்ளதாகவும் அந்தச் செய்திகள் மேலும் தெரிவித்துள்ளன.

இந்த விவகாரம் குறித்து அந்தச் செய்திகளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அமைச்சர்களான ஜி. எல். பீரிஸ், எஸ். பி. திஸநாயக்க ஆகியோர் கடந்த வியாழனன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் நடத்திய பேச்சுக்கள் பெரிதும் வெற்றி பெறாத நிலையில் தம்முடன் சேர்ந்திருக்கும் 20 அதிருப்தியாளர்களையும் இணைத்துக் கொண்டு பொ. ஐ. முன்னணியில் இருந்து விலகுவது குறித்து ஆலோசித்து வருகின்றனர்.

பொதுத்தேர்தல் ஒன்று விரைவில் நடைபெறும் பட்சத்தில் இந்த அதிருப்தியாளர் குழு ஐ. தே. கட்சியுடன் இணைந்து யானைச் சின்னத்தில் போட்டியிடுவதா அல்லது சுயேச்சைக் குழுவாகத் தேர்தலில் போட்டியிடுவதா என்பது பற்றியும் ஆலோசித்து வருகின்றது.

இதற்கிடையில் அரசுக்கு எதிரான அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்து யானைச் சின்னத்தின் கீழ் ஐக்கிய மக்கள் முன்னணி என்ற பெயரில் தேர்தலில் குதிப்பது குறித்து ஐக்கிய தேசியக் கட்சியும் விருப்பம் தெரிவித்துள்ளது — என்று அவை மேலும் தெரிவித்தன.

(க-7)

## சிங்கள இளைஞர் ஐவர் கைது

கொழும்பு, செப். 11

ஸ்ரீலங்காப் படையினருக்கு உதவ எனக்கூறி நிதிசேகரித்த 5 சிங்கள இளைஞர்களைப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

குருநாகல் பகுதியைச் சேர்ந்த இந்த 5 இளைஞர்களும் வாழைச்சேனைப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பீராவோடை, ஓட்டமாவடி போன்ற முஸ்லிம் கிராமங்களில் இவர்கள் நிதி சேகரித்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

(க-9)

## ரூ.5லட்சம்செலவில் புதிய தேர் முட்டி

சுழிபுரம் பறாளை ஈஸ்வர விநாயகர் ஆலய புதிய தேர் முட்டி மண்டபம் ஐந்து இலட்சம் ரூபா செலவில் புதிதாக கட்டப்படவுள்ளது.

மிகப் பழமை வாய்ந்த முன்னைய தேர் முட்டி முற்றாக இடிக்கப்பட்டு புதிய மண்டபத்திற்கான அடிக்கல் நடப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் வாழும் பண்ணாகத்தைச் சேர்ந்த ஒருவரின் உபயமாக இந்தப் பணி நடைபெற்று வருகின்றது.

(க-28)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், செப். 11

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம், வடமராட்சி விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் திக்கமுனை மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 3.30 மணி — கழுகுகள் 'ஏ' அணி எதிர் அல்வாய் நண்பர்கள் 'பி' அணி.

★ மாலை 4.30 மணி — கலட்டி ஐ. வி. க. அணி எதிர் யங்கம்பன்ஸ் 'பி' அணி.

(க-3)

## கண்டிக்கு 3 ஆயிரம் பொலீஸார் மேலதிக கடமைக்கு அழைப்பு

கண்டி, செப் 11

புத்தர் பெருமானின் புனித தந்தம் எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 7 ஆம் திகதி வரை தலதா மாளிகையில் பொது மக்கள் வழிபாட்டுக்காக வைக்கப் படவுள்ளது.

இதனை அடுத்து அங்கு நடைமுறைப்படுத்தப்படவுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக பெரும் எண்ணிக்கையான பொலீஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் எனப்பொலீஸ் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இதற்காக 3 ஆயிரம் பொலீஸார் நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்து கண்டிக்கு வரவழைக்கப்படுவர் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த வழிபாட்டில் கலந்து கொள்வதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து பல்லாயிரக்கணக்கானோர் கண்டிக்கு வருவர் என எதிர்பார்த்தே இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(க-7)

# சுதேச மருத்துவத்துறை வளர்ச்சிக்கு நமது பிரதேசத்தில் பல நெருக்கடிகள்

## கருத்தரங்கில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் உரை

யாழ்ப்பாணம், செப். 11

சுதேச மருத்துவத்தின் சிறப்புக்களைக் கற்றுத்தான் மேலைத்தேய வைத்தியத் துறை வளர்ச்சியடைந்தது. ஆனால் எமது பிரதேசத்தில் சுதேச மருத்துவம் வளர்ச்சியடைவதில் பல நெருக்கடிகள் எதிர்நோக்கப்படுகின்றன.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளார் ரி. வி. கிருஷ்ணசாமி.

ஆயுர்வேத வைத்தியர்கள் பங்குபற்றிய ஆயுர்வேத மூலிகைகள், மருந்துகள் தொடர்பான கருத்தரங்கில் பிரதம விருந்துவராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

சிவாநறுமணப் பூங்காவின் ஆதரவில் ஜெசித்தார் விருந்தகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந் நிகழ்வில் அவர் மேலும் கூறியதாவது:

சுதேச மருத்துவத்துறைக்கு இன்று பல பிரச்சினைகள் உண்டு. குறிப்பாகத் தென்பகுதியிலிருந்து மூலிகைகளைக் கொண்டு வருவதற்குப் பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதி பெறவேண்டியுள்ளது. அத்துடன் ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்திற்கும் இது தொடர்பாக அறிவிக்க வேண்டும்.

இப் பிரச்சினைகளுக்குத் தீர்வு எமது பிரதேசத்திலேயே எமது பொருளாதார வளங்களையும், அறிவையும் பயன்படுத்தி மூலிகைகளை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதுதான் என்றார்.

விழாவில் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை முதுநிலை விரிவுரையாளர் சே. சிவசண்முகராஜா உரையாற்றுகையில்: யாழ்ப்பாண மக்கள் சித்தமருத்துவத்தில் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளவர்கள், இதற்குரிய மூலிகைகள் மற்றும் மருந்து வகைகளை இங்கு உற்பத்தி செய்வதற்காக முன்னர் எடுக்கப்பட்ட பல முயற்சிகள் பல்வேறு காரணங்களினால் நடைமுறைப்படுத்த முடியாமற் போய்விட்டன. ஆனால் தற்போது சிவாநறுமணப் பூங்காவினர் இக்குறைபாட்டைஓரளவுக்கு நிவர்த்தி செய்துள்ளனர். இது பாராட்டுக்குரியது. கூடிய விரைவில் அவர்கள் இங்கே ஒரு மூலிகைத் தோட்டத்தினை உருவாக்கித்தர வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

நிகழ்விற்குத் தலைமை வகித்து உரையாற்றிய அகில இலங்கை அரச சேவைகள் சித்த ஆயுர்வேத வைத்தியர் சங்கத் தலைவர் கலாநிதி இரா. கனகலிங்கம் உரையாற்றுகையில் கடந்த சில வருடங்களாக மூலிகைகள் மற்றும் மருந்துகளைக் கொண்டு வரமுடியாத ஒரு நிலை காணப்பட்டது. இதற்காக ஆயுர்வேத திணைக்களம் ஒரு முகவரைத் தேடியபோது நடைமுறைச் சிக்கல்கள் மற்றும் போதியளவு இலாபம் கிடைக்காமை போன்றவற்றால் எவரும் முன்வரவில்லை. அந்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் கைகொடுத்தது சிவாநறுமணப் பூங்காவே. இங்கேயே மூலிகைகள் உற்பத்தி செய்யப்படுவதற்கும் இவர்கள் உதவி செய்யவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட வடக்கு—கிழக்கு மாகாண முன்னாள் ஆயுர்வேத மாகாணப் பணிப்பாளர் கலாநிதி பூ. உரோமகேஸ்வரன் தெரிவிக்கையில்:

சுதேச மருத்துவத்திலே சித்த மருத்துவத்திற்குப் பலரும் பல்வேறு விளக்கங்களைக் கூறுவர். ஆயினும் இதற்கு — நம்முன்னோர்கள் தமது மனதிலே சித்தப்படுத்திய அதாவது அறிவால் தேர்ந்தெடுத்து நெறிப்படுத்திய மருத்துவம் என்ற புதிய ஒரு விளக்கத்தையும் இதற்கு அளிக்கலாம்.

தரமான மூலிகைகளைப் பெற்றுக்கொள்ள முடியாமை சுதேச மருத்துவம் எதிர்கொள்ளும் பாரிய பிரச்சினையாகும். இதனால் சுதேச வைத்தியர்கள் ஆங்கில மருந்துகளை நாடுகிறார்கள். இந்நிலையில் எப்படி சுதேச மருத்துவம் வளர்ச்சியடையும்?

எமது நிலையை – தரத்தை நாமே குறைத்துக் கொண்டமை மிகவும் வெட்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும். தேசிய சிந்தனையற்ற ஒரு தலைமுறை எம்மிடையே உருவாக்கப்பட்டுள்ளது. எம்மிடையே பழக்க வழக்கங்களையும் பண்பாடுகளையும் நாமே இழிவாகக் கருதுகின்ற ஒரு சமுதாயம் உருவாகியுள்ளமை மிகவும் வேதனைக்குரிய தொரு விடயமாகும்.

தற்போதைய இளைய தலைமுறையினருக்காக மூலிகைகள் பற்றிய ஒரு பாடப் பகுதி புதிய கல்வித்திட்டத்திலே இணைக்கப்பட்டுள்ளதானது புரட்சிகரமான ஒரு நடவடிக்கையாகும். எமது பிற்போக்கான சிந்தனைகளால் எல்லாம் தெரியும் என நினைத்து ஒன்றுமே அறியாத ஒரு நிலையிலேயே உள்ளோம்.

எமது மருத்துவத்தின் அருமை பெருமைகளையெல்லாம் மேல்நாட்டார் வந்து அறிந்து சொல்ல வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். சிரட்டையில் கஞ்சி குடிப்பதன் மருத்துவ குணம் தெரியாது அதனை இழிவாகக் கருதுகிறோம். கடுமையான ஒரு நோய் காரணமாக இந்தியா கொண்டு செல்லப்பட இருந்த ஒரு நபரை வச்சிரவல்லி (பிரண்டை) மூலம் இங்கேயே குணப்படுத்த முடிந்தது. ஆகவே எமக்கு தரமான மருந்துகள் கிடைக்குமானால் இத்துறை மேன்மேலும் நன்கு வளர்ச்சியடையும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சித்த மருத்துவத்துறை விரிவுரையாளர் கலாநிதி பொ. இராமநாதன், பிரதம சித்த வைத்திய அதிகாரி கலாநிதி ப. வேதநாதன், கலாநிதி சோ. சபாநாதன் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வைடசிங் சஸ்டம்ஸ் இன் அனுசரணையுடன் மிகவும் சிறப்பாக இடம்பெற்ற இந் நிகழ்வின் இறுதியில் பிமல் ஆயுர்வேத, மூலிகை, மருந்துகள் மற்றும் ஏனைய மருந்துப் பொருள்களும் காட்சிக்கு வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் வைத்தியர்கள், மருத்துவ மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் உட்படப்பலர் கலந்து கொண்டனர்.

(க-9-ரி)

## சுழிபுரம் பகுதி புழுக்கொடியலுக்கு பெரும் கிராக்கி

சுழிபுரம், செப் 11

சுழிபுரம் பகுதியிலுள்ள புழுக்கொடியலுக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. வெளிநாட்டில் இருந்து இங்கு வந்தவர்கள் பெரும் விருப்பத்தோடு புழுக்கொடியலை வாங்கி மாவாக்கி கொண்டு செல்கின்றனர்.

கடந்த மாதத்தில் மட்டும் வலி.மேற்குப் பிரிவில் நூற்றுக்கு மேலான வெளிநாட்டுக் குடும்பங்கள் இங்கு வந்து தங்கிச் சென்றுள்ளன.

இவர்கள் யாவரும் மிக விருப்புடன் புழுக்கொடியல் மாவை 'பக்கற்' செய்து கொண்டு சென்றுள்ளனர்.

(க-28)

## உணவு முத்திரை இன்று விநியோகம்

யாழ்ப்பாணம், செப். 11

தென்மராட்சிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து கோண்டாவில் வடமேற்கு (J/115) கிராமசேவை அலுவலர் பிரிவில் வசிக்கும் மக்களுக்கான உணவு முத்திரை இன்று செவ்வாய்க்கிழமை கிராமசேவை அலுவலரின் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(க)

## 5 வீதிகள், வெள்ள வாய்க்கால் பருத்தித்துறையில் புனரமைப்பு

வடமராட்சி, செப். 11

பருத்தித்துறை நகரப்பகுதியில் உள்ள 5 வீதிகளும், ஒரு வெள்ளவாய்க்காலும் திருத்தி புனரமைக்கப்பட்டுள்ளன.

தாழ்வு கலட்டிவீதி 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவிலும், மாதனை—பல்லப்பை வீதி 50 ஆயிரம் ரூபா செலவிலும். புனித தோமையார் — முதலாம் குறுக்குத்தெரு வீதி, சந்தை மேற்கு ஒழுங்கை வீதி, சுப்பர்மடம் சித்தி விநாயகர் வீதி ஆகிய மூன்று வீதிகளும் தலா ஒரு லட்சம் ரூபா செலவிலும், ஓடக்கரை - கல்லூரி வீதி வெள்ளவாய்க்கால் 4 லட்சம் ரூபா செலவிலும் பருத்தித்துறை நகரசபையால் திருத்தி புனரமைக்கப்பட்டுள்ளன.

(க-173)


## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 13 — 12 — 1931 | 11 — 09 — 1998 |

அமரர் மார்க்கண்டு ஈஸ்வரன்

(மராமத்துப் பொறியியலாளர் – யாழ். மாநகரசபை)

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

175, நாயன்மார் வீதி, நல்லூர். (92139)

உதயன்

## ஆற்றைக் கடக்கும் அண்ணன், தம்பி!

"ஆறு கடக்கும் வரை அண்ணன் - தம்பி. கடந்த பின் நீ யாரோ, நான் யாரோ" - என்று ஒரு பழமொழி உண்டு.

பொது மக்கள் ஐக்கிய முன்னணி - ஜே.வி.பி. உறவு போகின்ற போக்கில், இப்படி 'டாட்டா' காட்டுவதுடன் தான் போய்முடியும் போல் தெரிகின்றது.

பொ.ஐ.முன்னணிக்கு வழங்கி வந்த ஆதரவை முஸ்லிம் காங்கிரஸ் விலக்கியதால் பொ.ஐ.மு.அரசு சிறுபான்மை அரசாகியது.

இதனால் எழுந்த நெருக்கடியை எதிர்கொள்வதற்கு ஜனாதிபதிக்கு ஆக மூன்று வழிகள்தான் இருந்தன. ஒன்று - ஆட்சியை எதிரணியிடம் ஒப்படைப்பது. இரண்டாவது - நாடாளுமன்றத்தைக் கலைத்துப் புதிய பொதுத் தேர்தலுக்கு உத்தரவிடுவது. மூன்றாவது - பொ.ஐ.முன்னணிக்கான நாடாளுமன்ற ஆதரவை எந்த வழியிலாவது பெருக்கிக் கொள்வது.

தற்போதைய அரசமைப்பு ஏற்பாடுகளின்படி, ஒரு பொதுத்தேர்தல் நடந்து ஒரு வருட காலத்துக்குள் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை. எனவே அடுத்த 10ஆம் திகதி வரை தற்போதைய நாடாளுமன்றத்தை வைத்துக் கொண்டு ஜனாதிபதி தாக்குப் பிடித்தால்தான் பொதுத் தேர்தலுக்கு உத்தரவிட முடியும்.

எதிர்க்கட்சிகளிடம் ஆட்சியை ஒப்படைத்தாலும் கூட, நெல்லிக்காய் மூடை போன்று பல கட்சிகளின் கூட்டமைப்பு அது. அதில் பெரிய கட்சியான ஐ.தே.க.முன்னின்று மாற்று அரசு அமைப்பதாயின் அதுவும் ஜே.வி.பியில் தங்கியிருக்க வேண்டிய நிலையில்தான் நாடாளுமன்ற கதிரைகள் தொடர்பான கணக்கு அமைந்திருந்தது. அப்படி எதிரணி அரசு அமைத்தாலும், அதுவும் கூட தாக்குப்பிடிக்கக் கூடிய அரசாக இருக்கும் வாய்ப்பு இருக்கவில்லை. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி வேறு கட்சியைச் சேர்ந்தவர். அவருக்கு மாற்றான கருத்துக் கொண்ட - நாடாளுமன்ற வலுவில் ஐக்கியம் இல்லாத - ஓரணி ஆட்சிப்பீடத்தைத் தக்க வைப்பது கஷ்டமே.

எனவே எதிரணியிடம் ஆட்சியை ஒப்படைத்தால், நாடாளுமன்றத்தில் - ஐக்கியமான - பலமான நிலை தங்களுக்கு இல்லை என்பதால் நாடாளுமன்றத் தீர்மானம் ஒன்றின் மூலம் அவர்களும் விரைவில் பொதுத் தேர்தலுக்கு வழி செய்வார்கள் - அதுவும் தேர்தல் நடக்கும் வரையான காபந்து அரசை தமது கையில் வைத்துக் கொண்டு.

இந்த வாய்ப்பை எதிரணிக்கு வழங்க விரும்பாத ஜனாதிபதி -

எதிரணி ஆட்சி அமைந்தாலும் ஜே.வி.பியை அரவணைத்தே ஆட்சி அமைகக்கும் என்பதால் அதை நாமே செய்தால் என்ன என்று திட்டம் தீட்டினார்; பொ.ஐ.மு. - ஜே.வி.பி. ஒப்பந்தம் பிறந்தது.

தற்காலிகமாக நாடாளுமன்றத்தில எதிர்நோக்கிய பிரச்சினையை பொ.ஐ.மு.சமாளித்து விட்டது.

இனிமேல் ஜே.வி.பி.யுடன் உறவு முறிந்தாலும் ஜனாதிபதிக்குக் கவலை இல்லை. அப்படி ஒரு நிலை ஏற்பட்டால், நாடாளுமன்றத்தை மீண்டும் ஒத்திவைத்துவிட்டு, ஒக்ரோபர் 10 ஆம திகதிக்குப் பின்னர் இந்த நாடாளுமன்றத்தைக் கலைத்துப் புதிய பொதுத தேர்தலுக்கு அவர் உத்தரவிடலாம். தேர்தல் வரையான காபந்து அரசும் பொ.ஐ. முன்னணி கையில்தான் இருககும். அதை வைத்துக்கொண்டு தேர்தலில் தேவையான குளறுபடிகளையும் செய்ய முடியும்.

ஜே.வி.பியுடன் உடன்பாடு காணப்பட்ட விடயங்களுக்கு அப்பால் போய் நின்று ஜனாதிபதி, வெளிவிவகார அமைச்சர் போன்றோர் வெளியிடும் கருத்துக்கள் இந்தத் திட்டம்தான் மறைப்பில் கிடப்பதாக எண்ண வைக்கின்றன.

புலிகளுடன் சமாதானத் தீர்வு ஒன்று எட்டப்படுவது போன்ற பரபரப்பை ஏற்படுத்தி விட்டு, அந்தப் பரபரப்புக்கு மத்தியில் தேர்தலை நடத்தி, அதன் மூலமும், தேர்தல் குளறுபடிகள் மூலமும் ஆட்சியைத் தக்க வைக்கும் திட்டம்தான் அரசுத் தரப்பில் இருப்பதாகத் தெரிகின்றது.

'ஆற்றைக் கடக்கும் வரை அண்ணன் - தம்பி' என்பது போல, நாடாளுமன்ற நெருக்கடியைச் சமாளிக்கும் வரை ஜே.வி.பியுடன் புரிந்துணர்வு, ஒப்பந்தம், கூட்டு, ஆதரவு என்றெல்லாம பேசிய பொ.ஐ.மு., 'ஆற்றைக் கடந்த பின் நீ யாரோ, நான் யாரோ?' என்பது போல் இப்போது ஜே.வி.பியுடன் காணப்பட்ட உடன்பாட்டுக்குப் பிறழ்வான நடவடிக்கையில் ஈடுபடுவது கூட இந்த நோக்கத்தில் தான்.

## சம்மாந்துறை, சாய்ந்தமருதுப் பகுதிகளில்
# அமைச்சர் பேரியல் பங்குபற்றிய கூட்டங்களில் கைக்குண்டு வீச்சு

கொழும்பு,செப்.11

சம்மாந்துறை மற்றும் சாய்ந்த மருதுப் பகுதிகளில் அமைச்சர் பேரியல் அஷ்ரப் தலைமையில் கூட்டங்கள் நடைபெற்றபோது இரு சாராருக்கும் இடையே ஏற்பட்ட மோதல்களில் கைக்குண்டு வீச்சுக்கள் இடம் பெற்றுள்ளன.

நேற்றுமுன்தினம் சம்மாந்துறை நகர மண்டபத்தில் இடம்பெற்ற கூட்டத்தைத் தொடர்ந்து சம்மாந்துறை மற்றும் சாய்ந்தமருதுப் பகுதிகளில் இடம்பெற்ற கூட்டங்களிலேயே இக் கைக்குண்டு வீச்சுக்கள் இடம்பெற்றுள்ளன.

கைக்குண்டு வீச்சு சம்பவங்களில் பாதிப்பு ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

குண்டு வீச்சை அடுத்து பொலீஸாரும், அதிரடிப்படையினரும் குழப்பங்கள் விளைவிக்க முயன்றவர்கள் மீது தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படுகிறது.

அமைச்சர் பேரியல் அஷ்ரப்பின் ஆதரவாளர்கள் பயணம் செய்த வாகனங்கள் மீதும் சிலர் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதனால், இரு வாகனங்கள் சேதமடைந்துள்ளதாக சம்மாந்துறைப் பொலீஸார் தெரிவித்தனர். (க)

## நாட்டு நடப்பு

(தெற்கில் வரட்சி. அதை ஒட்டி எழுந்த கவிதை இது)

இன்னல்கள் போக்கும் வண்ணம்
இனிய நல்லாட்சி நல்கி
வண்ணமார் தமிழர் நாட்டை
வகுத்தொன்றாய் அவர்க்கு நல்கி
வெம்சிறை தன்னில் மற்று
வேறுள முகாமில் வாடும்
நம் தமிழர் தம்மை நீவீர்
நலம்பெற விடுதியாயின்
உம்மவர் வரட்சி நீங்கும்
உவந்திட கொட்டும் வானம்.

- விகடகவி.

# பிரிட்டனுக்குப் புகலிடம் தேடி வந்தவர்களை தடுத்துவைத்திருப்பது சட்டவிரோதமாகும்

## அந்நாட்டு மேல்நீதிமன்றத் தீர்ப்பால் நெருக்கடி நிலைமை

லண்டன் செப்.11

பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்தவர்களைத் தடுப்பு முகாம்களில் தடுத்துவைத்திருப்பது சட்டவிரோதமானது என அந்நாட்டு மேல்நீதிமன்றம் கடந்த வெள்ளியன்று தீர்ப்பு வழங்கியுள்ளது.

அரசியல் தஞ்சம் கோரி பிரிட்டனில் தஞ்சமடைந்திருக்கும் அதாவது ஒக்சின்டன் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 11ஆயிரம் பேருககும் தலா 10ஆயிரம் ஸ்ரேலிங் பவுண்ஸை (இலங்கை நாணயப்படி 13 லட்சம் ரூபா) நஷ்டஈடாக வழங்க வேண்டும் என்றும் அந்தத் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒக்சின்டன் தடுப்பு முகாமில் உள்ள நான்கு குர்திஷ் இனத்தவர்கள், தாங்கள் சட்ட விரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகக் கூறி வழக்குத்தாக்கல் செய்திருந்திருந்தனர். இந்த வழக்கு விசாரணையின் இறுதியிலேயே பிரிட்டிஷ் மேல்நீதிமன்றம் இவ்வாறான தீர்ப்பை வழங்கியுள்ளது.

இதேவேளை -

• இந்தத் தீர்ப்பு தமக்கு பெரும் கவலை அளிப்பதாகத் தெரிவித்துள்ள பிரிட்டிஷ் உள்துறை அமைச்சர் டேவிட் பிளங்கெற் இது பிரிட்டிஷ் அரசை மிகவும் குழப்பமடையச்செய்யும் விவகாரம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

உள்துறை அமைச்சகத்தைச் சேர்ந்த சட்டத்தரணிகள் இந்த மேல் நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்ய ஆயத்தமாகி வருகின்றனர் என்றும் -

மிகக் கடுமையான அதேசமயம் நீதியான குடிவரவு கட்டுப்பாடுகளைத் திறமையான முறையில் மேற கொள்வதற்கு இயலாத வகையில் நீதிமன்றத் தீர்ப்பின் விளைவுகள் ஏற்படுத்தியுள்ளதாகவும் உள்துறை அமைச்சு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் அரசு அரசியல் தஞ்சம் அளிப்பது தொடர்பான தனது நிலைப்பாடுகளை இறுக்கமாக்க வேண்டும் என பிரதமர் ரொனி பிளயரின் அரசியல் எதிரிகளும், ஐரோப்பிய நாடுகளும கடும் அழுத்தத்தைக் கொடுத்து வரும் சமயத்தில் பிரிட்டிஷ் நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது. (க-7)

## தெரிவுசெய்த இடம் பொருத்தமில்லை
# பருத்தித்துறை மத்திய மருந்தகம் நகர மத்தியில் அமையவேண்டும்
### 65 பேர் கொண்ட குழு கோரிக்கை

வடமராட்சி,செப்.11

பருத்தித்துறை அரசினர் மத்திய மருந்தகத்துக்கு சொந்தமாக புதிய கட்டடம் அமைக்க தெரிவு செய்யப்பட்ட இடம் பொருத்தமற்றது. இதற்கான கட்டடத்தை நகர மத்தியில் அமைக்கப்பட வேண்டும் என பருத்தித்துறை நகரப் பகுதியைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள், வர்த்தகர்கள் அடங்கிய 65 பேர் கொண்ட குழு ஒன்று கோரிக்கை விடுத்துள்ளது.

இக்கோரிக்கை வடக்குக் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இக்கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

ஒன்றரை நூற்றாண்டு காலத்துக்கு முன்னர் பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை ஏற்றியிறக்குவோர், கப்பல்கள் மூலம் வந்து செல்வோர் ஆகியோருக்குத் தொற்று நோய் பரவாமல் தடுக்கும் பொருட்டு துறைமுகத்தோடு அண்டிய பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட பருத்தித்துறை மத்திய மருந்தகம் இனவன் செயல்கள் ஆரம்பிக்கும் காலம் வரை அப்பகுதியிலேயே இயங்கி வந்தது.

சுமார் 20 ஆண்டு காலத்துக்கு முன்பிருந்து - இன வன்செயல் ஆரம்பமான காலத்திலிருந்து நகரின் பிறிதோர் இடத்துக்கு அம் மருந்தகம் மாற்றப்பட்டு இயங்கி வருகிறது.

தற்போது இம்மத்திய மருந்தகத்துக்கென சொந்த நிலத்தில் சொந்தமாக கட்டடம் அமைப்பதற்கு அத்தியடிப் பிள்ளையார் கோயில் தர்மசாதனக் காணி தெரிவுசெய்யப்பட்டுள்ளது. தர்மசாதனக் காணி நீதிமன்றின் அனுமதியின்றி நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் நன்கொடையாக வழங்க முடியாது. அத்துடன் தெரிவு செய்யப்பட்ட குறிப்பிட்ட இடம் நகரின் மத்தியில் அமையவில்லை. இங்கு மத்திய மருந்தகம் அமைக்கப்படுமானால் துறைமுகத் தொழிலாளர்கள், மீனவர்கள் வைத்திய வசதிகளைப் பெறமுடியாது போய் விடும்.

நகர மத்தியில் மருந்தகத்தை அமைப்பதற்கு தென்னங்கிணற்றடிக் காணியை அல்லது மூன்றாம் குறுக்குத் தெருவில் உள்ள காணியை வழங்கப் பருத்தித்துறை நகரசபை முன்வந்துள்ளது. ஆதலால் அத்தியடியில் மத்திய மருந்தகத்துக்கான கட்டடத்தை அமைப்பதை விடுத்து நகரசபைக்குச் சொந்தமான காணியில் இதனைக் கட்ட முன்வரவேண்டும்.

கோரிக்கையின் பிரதிகள் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர், உள்ளூராட்சி ஆணையாளர், யாழ். அரச அதிபர், யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர், பருத்தித்துறை நகர, பிரதேச சபைத் தலைவர்கள் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (க-173)

## நாளை காங்கேசன் செல்கிறார் அதிகாரி

யாழ்ப்பாணம்,செப்.11

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலக அதிகாரி என்.ஜீவேஸ்வரா நாளை புதன்கிழமை காங்கேசன்துறை கைதிகள் தடுப்பு முகாமுக்குச் சென்று அங்குள்ள கைதிகளைப் பார்வையிடவுள்ளார்.

கைதிகளின் உறவினர்களால் அவர்களுக்கு வழங்கப்பட்ட கடிதங்கள் மற்றும் பொருள்களையும் அவர் எடுத்துச் சென்று கையளிப்பார். (க-10)

## புதுமணப் பெண்ணின் தங்கச் சங்கிலி அபகரிப்பு

வலி.வடக்கு,செப்.11

நித்திரையில் ஆழ்ந்திருந்த புதுமணப்பெண்ணின் கழுத்தில் இருந்த மூன்று பவுண் நிறையுடைய தங்கச் சங்கிலி திருடர்களினால் வெட்டி எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

மல்லாகம் பகுதியில் கடந்த சனிக்கிழமை இரவு இந்தத் துணிகரத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டின் உள்ளே புகுந்த திருடர்கள் கதவுகள் அனைத்தையும் திறந்து விடப்பட்ட பின்னரே திருட்டில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரியவருகின்றது. (க-86)

## பருத்தித்துறை பஸ் நிலையத்தில்
# பயணிகள் தங்குமிட கட்டடம் நாளை திறந்து வைக்கப்படும்

வடமராட்சி,செப்.11

பருத்தித்துறை பஸ் நிலையத்தில் புதிதாகக் கட்டிமுடிக்கப்பட்ட நேரக்கணிப்பாளர் அலுவலகம், பயணிகள் தங்குமிடம் ஆகியவற்றைக் கொண்ட கட்டடத்தையும், மீன் சந்தையில் நிறுவப்பட்டுள்ள கொல் களத்தையும் நாளை புதன்கிழமை பருத்தித்துறை நகர சபைத் தலைவர் வின்சன் கெனடி சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைப்பார்.

நேரக்கணிப்பாளர் அலுவலகம், பயணிகள் தங்குமிடம் ஆகியவற்றைக் கொண்ட கட்டடம் 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவிலும், கொல்களம் 3 லட்சம் ரூபா செலவிலும் பருத்தித்துறை நகர சபையால் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது.

(க-173)

## நாளை


ஆவணி 27
புதன்கிழமை
திதி: நவமி
காலை 6.12 வரை.
தசமி
பின்னிரவு 4.24 வரை.
நட்சத்திரம் : திருவாதிரை
மாலை 6.12 வரை.
சுபநேரம்: 4.33 - 6.03
ராகுகாலம் : 12.03 - 1.33
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

காதல் என்பது இருவர் மனம் லயித்து சுருதியில் சேர்ந்த சங்கீதம் போன்றது. மலரில் மணம் இருப்பது போன்றது. மதியில் குளிர்ச்சி இருப்பது போன்றது.

*அறிஞர் அண்ணா.*


## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



# சின்னஞ்சிறு விளம்பரம்

### விடற்றவன்.

சி.வி.வேலுப்பிள்ளையின் "வீடற்றவன்" நாவலின் விளக்கமும் விமர்சனமும - அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதியது. 10ஆம், 11ஆம் தரங்களில விருப்பப் பாடமான தமிழ் இலக்கியம் கற்கப் பயன்படும். 50 பக்கங்கள். ரூபா 25.00. (92132)

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மாநகர எல்லைக்குள், நீராவியடி, பிறவுண் வீதியில் நல்ல குடியிருப்புச் சூழலில் 4 பரப்பும் 1 குழியுமான காணி விற்பனைக்கு உண்டு. இரண்டு துண்டுகளாகவோ, ஒரே துண்டாகவோ பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: திருமதி சாந்தாதேவி இரகுநாத முதலியார், (நீராவியடிப் பிள்ளையார் கோயில் தர்மகர்த்தாவுக்காக) 39, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (92151)

### தகவல் தரவும்

News Mate 50 Yamaha, No. NPGD 5239 (கடும் நீலம்) V-50-7697721. இது தொடர்பான விவரங்கள் தெரிந்தால் உடனடியாக நாகராசா - பிரேம்குமார், கோணாவளை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். T.P. 021-3005 எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (92138)

### திருமண சேவை

1971ஆம் ஆண்டு, அனுச நட்சத்திரம், 8இல் செவ்வாய்க்குற்றமுள்ள, 6 அடி உயரம், லண்டனில் கொம்பியூட்டர் எஞ்சினியராகப் பணிபுரியும் மணமகனுக்குப் பொருத்தமான மணப்பெண் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். திருமணம் முடித்து அழைத்துச் செல்லப்படுவார். துர்க்கா திருமணசேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (92149)

### தவறிவிட்டது

நீதிமன்ற வீதி, மல்லாகம் என்னும் முகவரியுடைய செல்லத்துரை சுந்தர் என்பவரது தேசிய அ.அட்டை (இல. 781403189V), விசேட அ.அட்டை (இல. 0907022866) என்பன 21.08.2001 அன்று கொழும்பிலிருந்து வரும் கப்பலில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். (92153)

மாணிக்கம் தவமணிதேவியின் தேசிய அ.அ. (இல.6085504176V), விசேட அ.அட்டை (இல.0903039057) என்பன தொண்டமனாறு சந்நிதி முருகன் ஆலயத்தில் 01.09.2001 சனிக்கிழமை கைதவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஆவரங்கால் அம்பாள் தொலைத் தொடர்பகத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். T.P.No-070-212665 (92147)

செல்வி சின்னராசா விதூசனாவின் விசேட அ.அ. (இல.091057474), சின்னராசா மதீசனின் விசேட அ.அ. (இல. 091055776) என்பன சாவகச்சேரி இலங்கை வங்கிக்கும் யாழ்.பஸ் தரிப்பு நிலையத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ்.பேருந்து காரியாலயத்தில் ஒப்படைத்துதவவும். (92152)

### படிவம்

தேசிய தகவல் தொழில்நுட்பத்தில் தேசிய சான்றிதழுக்கான பயிலுநர்களைத் தேர்ந்தெடுத்தலுக்கான விண்ணப்பப்படிவம் விற்பனையாகின்றது. முடிவு திகதி 21.09.2001. கல்வித் தகைமை க.பொ.த. (சா/த). பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (C/18211)

---

## நன்றி கூறி வாழ்த்துகின்றோம்

**நல்லூர் சங்கிலியன்தோப்பு கிராமஅபிவிருத்திச் சங்க** குடி தண்ணீர் விநியோகத்திற்காகவும் மூத்த விநாயகர் சனசமூக நிலைய புனரமைப்புக்காகவும், சிறுவர் பாடசாலை திருத்த வேலைகளுக்காகவும் நிதி ஒதுக்கீடு செய்து வழங்கியமைக்காக, வடக்கின் புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார இந்து சமய கலாசார அமைச்சரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமாகிய



மாண்புமிகு அமைச்சர்

**K.N.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களுக்கும்



யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளருமான

கௌரவ

**கே.வி.குகேந்திரன்** *(ஜெகன்)*

அவர்களுக்கும்



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட பிரதி அமைப்பாளரும், நல்லூர் பிரதேச சபைத் தலைவருமான

**உயர்திரு.க.மணிபல்லவராஜன்**

அவர்களுக்கும்

எமது மனமார்ந்த நன்றியறிதலையும் பாராட்டுதல்களையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவரும், நிர்வாகிகளும்,
மூத்த விநாயகர் சனசமூக நிலையம்,
சங்கிலியன் தோப்பு
கிராம அபிவிருத்திச் சங்கம்.

*மூத்த விநாயகர் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*

(92146)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 04 | 12 |
| 05 | 08 |
| 1922 | 2001 |

## திருமதி மாணிக்கம் கிருஷ்ணர்

அன்பின் ஒளிவிளக்கே அருளின் - திருவுருவே!
மன்பதை வாழ்த்தும் மணிச்-சுடரே - என்றென்றும்
நின் அன்புவடிவம் அகலா தகத்தை - வீட்டு
தன்னிகரில் ஈசனடி சார்க.

இன்று (11-09-2001) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

வரணி வடக்கு,
வரணி. (92089)

- குடும்பத்தினர்

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**உயர்பட்டப் படிப்புகள் பீடம்**

**நேர்முகத் தேர்வு - கல்வி முதுமாணிக் கற்கைநெறி 2001/2002**

மேற்படி கற்கைநெறிக்கான எழுத்துத் தேர்வில் தகைமை பெற்ற விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகத் தேர்வு 2001-09-20ஆம் திகதி முற்பகல் 9.30 மணிக்குப் பல்கலைக்கழகச் சபையறையில் நடைபெறும்.

நேர்முகத் தேர்வுக்கான கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியலை உயர்பட்டப் படிப்புகள் பீடாதிபதி அலுவலகத்தில் பார்வையிடலாம்.

**பதிவாளர்,**
**யாழ்.பல்கலைக்கழகம்,**
2001.09.07 (C/18213)

---

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**இலங்கை**

**பல்கலைக்கழக அனுமதி 2001/2002**

*கற்கைநெறி* - **கலை**

*விசேட அனுமதி*

**நடனம்/சங்கீதம்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 2001/2002 கல்வியாண்டுக்கு விசேட அனுமதியின் கீழ், உயர்தரப் பரீட்சையில் நடனம்/சங்கீதம் ஆகிய பாடங்களில் சித்தி பெற்ற மாணவர்களுள் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் பெயர்ப் பட்டியல் பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழுவால் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு அனுப்பப்பட்டு, கலைப்பீடாதிபதி அலுவலக விளம்பரப்பலகையில் இடப்பட்டுள்ளது. அனுமதிபெற்ற மாணவர்கள் தங்கள் பதிவுகளை 21.09.2001ஆம் திகதிக்கு முன் மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

**பதிவாளர்.** 2001.09.07 (C/18214)

---

# JAFFNA SCIENCE ASSOCIATION

## SECTION C

**A TALK WILL BE PRESENTED**

BY

**Prof.S.V.PARAMESWARAN**

Senior Professor of Physiology & Head Dept. of Physiology

on

CURRENT TRENDS IN MEDICAL EDUCATION

IN THE LECTURE HALL, FACULTY OF MEDICINE
ON 12TH SEPTEMBER, 2001
AT 2.30 p.m.

**ALL ARE WELCOME**

***SECRETARY SECT.C-JSA.***

(C/18212)

---

## மூன்றாவது ஆண்டு நினைவலைகள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19 | 11 |
| 02 | 09 |
| 1976 | 1998 |

## செல்வன் புஸ்பநாதன் றமணன்

மூன்றாண்டுகள் சென்றாலும் உன்
இனிமையான நினைவுகள் எம் இதயத்தை விட்டு
அகலவில்லை!
எங்கே சென்று விட்டாய் எம்மைவிட்டு?
றமணா! உன் ஆத்மா சாந்தி அடைய
இறைவனை வேண்டுகின்றோம்!

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

அன்பு மறவாத:
***அப்பா, அம்மா, சகோதரர்கள்.***

*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.* (92108)

---

## "நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம்"



மகாவித்துவான், இலக்கண வித்தகர்

## இ.நமசிவாய தேசிகர்

வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்டு
ஓராண்டு நிறையும் இவ்வேளை,
மெய்ப்பொருள் காணும் முயற்சியில்
தம் வாணாளெல்லாம் ஈடுபட்டு,
ஊருணியாய் விளங்கி, உறவையும்
ஊரையும் உலகையும் உயர்த்திய
அப்பெருமகனை -

நெஞ்சம் நெகிழ நினைந்துருகும்:
- குடும்பத்தினர்.

*அரசடி வைரவர் கோயிலடி,*
*சங்கானை.* (92050)

# மக்கள் மனங்களில் ஆன்மீகச் சிந்தனைகளை ஏற்படுத்த அரும்பாடுபட்டவர் ஆத்மஜோதி

## ஞாபகார்த்த விழாவில் உரை

யாழ்ப்பாணம்,செப்.11

ஆன்மீக சிந்தனைகளை மக்கள் மனங்களில் பதியவைப்பதற்கு முன்னின்று செயற்பட்டவர் ஆத்மஜோதி நா.முத்தையா.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம்.

யாழ். இந்துசமயப்பேரவையின் முன்னாள் தலைவர் அமரர் ஆத்மஜோதி நா.முத்தையாவின் ஞாபகார்த்த விழா அண்மையில் ஏழாலையில் இயங்கும் கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் நடைபெற்றது.

இந்த விழாவில் கலந்துகொண்டு ஞாபகார்த்தவுரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஏழாலை மடாலய தர்மகர்த்தா ந.தெய்வேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் திருமதி நாச்சியார் செல்வநாயகம் மேலும் தெரிவித்ததாவது:-

கல்விக்கூடங்களும், பல்கலைக் கழகங்களும் பல கலாநிதிகளையும் பேராசிரியர்களையும் தொழில்நுட்ப வல்லுநர்களையும், வைத்தியநிபுணர்களையும், பட்டதாரிகளையும் உருவாக்கிவருகின்றன. எனினும் அவற்றால் ஆத்மஜோதிபோன்ற மகா ஞானியை உருவாக்க முடியாமல் இருக்கின்றதே. இதற்குக் காரணம் என்ன என்று எம்மைப்போன்றவர்களால் சிந்திக்காமல் இருக்க முடியாது.

பல நூல்களைக் கற்றுக்கொள்வதால் அறிவை வளர்த்துக்கொள்ளலாம் என்பது உண்மை. எனினும் ஒருவன் சாதனையாளனாக விளங்குவதற்கு அவன் ஆத்மீகத்தில் உயர வேண்டும். வெறும் போதனைகளும் பட்டங்களும் பதவிகளும் நாட்டில் எதனையும் சாதித்துவிடாது. சாதனையோடு கூடிய போதனையே இன்று எமக்குத் தேவையாகவுள்ளது.

ஆத்மஜோதி பெரியஞானி, சாதனையாளன் என்ற பெருமைக்குரியவர். அவர் மேற்கொண்ட தொண்டுகள் அளப்பரியன. இந்துக்களுக்கு இளைக்கப்படும் அநீதியை தட்டிக் கேட்பதற்காக இந்துசமயப்பேரவையை ஸ்தாபித்து உலகமெங்கும் சென்று ஆத்மீக சிந்தனையை மக்கள் மனதில் பதியவைத்த பெருமைக்குரியவர் - என்றார்.

சைவச் சிறுவர் சிறுகுடிலைத் திறந்துவைத்து வலி.வடக்குப் பிரதேச சபைத் தலைவர் திருமதி பா. ஸ்ரீபாஸ்கரன் உரையாற்றுகையில்:-

பாதிக்கப்பட்ட கைதடி சைவச் சிறுவர் இல்லத்தை நடத்துவதில் உள்ள சிரமங்களை நான் நன்கு அறிவேன். இந்தப் பிள்ளைகளுக்கு உதவவேண்டியது எமது பெரும் பொறுப்புகளில் ஒன்றாகும். மாடி மண்டபங்களைக்கட்டிக்கொள்ள முடியாது போனாலும், சிறு குடில்களை அமைத்தாவது சைவச் சிறுவர்களைப் பாதுகாத்து வரும் இந்து சமயப் பேரவைப் பணியைப் பாராட்டுகின்றோம்.

எமது மக்கள் பல கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்கின்றபோதும் இதுபோன்ற நிறுவனங்களுக்கு உதவிவருவது பெருமைக்குரியதாகும். இன்று சைவச்சிறுவர் சிறு குடிலைத் திறந்து வைப்பது எமக்குப் பெருமையைத் தேடித் தந்துள்ளது - என்றார்.

யாழ்.இந்து சமயப் பேரவைச் செயலாளர் சி.சக்திகிரீவன் பேசுகையில்:-

இந்த நாட்டில் யுத்தம் தொடர்ந்தால் இந்துக்களின் ஆத்மீகப் பௌதிகக் கட்டமைப்புக்களும் ஆத்மீக பாரம்பரிய பண்பாடுகளும் அழித்தொழிக்கப்பட்டுவிடும் என்பதை ஆத்மஜோதி நன்கு உணர்ந்தமையால் சமாதானம் வேண்டி பாதயாத்திரையை நடத்தி வந்தார். இந்து சமயப் பேரவையின் தலைவராக இருந்து எமது மத மொழி நலனிற்காகத் தம்மாலியன்றவற்றைச் செய்தார்.

ஐ.தே.கட்சி ஆட்சிக் காலத்தில் ஆத்மஜோதி நிலையம் தீக்கிரையாக்கப்பட்டது. இன்று ஆத்மஜோதியால் புனரமைப்புச் செய்யப்பட்ட கைதடி சைவச் சிறுவர் இல்லம் அழிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஆத்மஜோதியால் உருவாக்கப்பட்ட பல பௌதிகக் கட்டமைப்புக்கள் அழிக்கப்பட்டுள்ளன. எனினும் ஆத்மஜோதியின் ஆத்மீக ஒளியை எவராலும் அணைத்துவிடமுடியாதிருக்கிறது. இதுவே ஆத்மஜோதியின் ஆத்மீக வாழ்விற்குக் கிடைத்த வெற்றியாகும்.

யாதுமற்ற சைவச் சிறுவர்களைப் பராமரிக்கும் எமது சிறுவர் இல்லத்திற்கு அரசு உதவாது போனாலும் ஏழைப் பொதுமக்களின் உதவியைக் கொண்டு எமது பணி தொடர்ந்தபடியே உள்ளது. இதனையே ஆத்மஜோதியும் விரும்பினார். கோடி ரூபாக்களை தனவந்தர்களிடம் இருந்து பெறுவதைவிட ஒரு ரூபாயைத் தர்மத்திற்காக ஏழைகளிடமிருந்து பெறுவதையே இந்து சமயப் பேரவை பெருமையாக எண்ணுகிறது - என்றார்.

யாழ்.பல்கலைக்கழக இசைத் துறைத் தலைவர் நா.வி.மு.நவரத்தினம் பேசுகையில்:-

ஆத்மஜோதி சைவத்தமிழ்த் தொண்டு செய்த ஒரு தியாகி. இவரது பெருமையை இன்றைய நாட்டுத் தமிழர்களே போற்றுகின்றனர் - என்றார். (க-7)




கொக்குவில் இந்துக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற தமிழ்த்தின விழாவில் மேற்படி கல்லூரி மாணவர்களால் நடத்தப்பட்ட வில்லுப்பாட்டு நிகழ்ச்சியைப் படத்தில் காண்கிறீர்கள்.

## இடமாற்றங்கள் ரத்தாகின

யாழ்ப்பாணம்,செப்.11

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ்.பிராந்திய ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்ட இடமாற்றம் அமைச்சர் டக்ளஸின் தலையீட்டை அடுத்து ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இந்த இடமாற்றங்களை ரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சபையின் வடபிராந்திய தொழிற் சங்கப் பிரதிநிதிகள் அண்மையில் வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்துக் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்தச் சந்திப்பைத் தொடர்ந்து ரத்மலானை தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் தலைவர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவுடன் தொலைபேசியில் தொடர்புகொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்.பிராந்திய ஊழியர்களின் சிரமங்களைக் கருத்திற்கொண்டு இடமாற்றத்தை ரத்துச்செய்வதற்கு ஆவனசெய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

இதனையடுத்து தலைவர் ஹிஸ்புல்லா யாழ்பிராந்திய ஊழியர்களின் விருப்பத்துக்கு மாறாக எந்தவொரு வெளிமாவட்டத்துக்கும் இடமாற்றம் செய்யும் நோக்கமில்லை என்று உறுதிப்படத் தெரிவித்தார். (க-4)

# முறைசாராக் கல்வி மூலம் மாணவருக்கு கணனிப் பயிற்சி

யாழ்.கல்வி வலயத்தில் உள்ள 24 பாடசாலைகளில் கணனிப் பயிற்சியை முறைசாராக் கல்வி மூலம் வழங்க யாழ்.கல்வி வலயம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு 1999, 2000, 2001ஆம் ஆண்டில் ஏதாவது ஒருவருடத்தில் தோற்றியவர்கள் இப்பயிற்சி நெறிக்கு அதிபர்கள் மூலம் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப் படிவங்களை நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு முன்னர் அதிபர்கள், யாழ் கல்வி வலய முறைசாராப் பிரிவில் நேரடியாக ஒப்படைக்குமாறு யாழ் கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் அறிவித்துள்ளார். (க-51)

# கைப்பணியாளர் சங்கம் நெடுந்தீவில் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம்,செப்.11

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் அண்மையில் கைப்பணியாளர் சங்கம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த 3ஆம் திகதி நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் ஜே.எக்ஸ் செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற கைப்பணியாளர்களுக்கான கலந்துரையாடலின் போதே இந்தச் சங்கம் அமைக்கப்பட்டிருக்கின்றது.

இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட யாழ். செயலக தொழிற்றுறைத் திணைக்கள அதிகாரிகள் எதிர்கால தொழிற்றிட்டங்களைத் தயாரித்துத் தம்மிடம் சமர்ப்பிக்குமாறு சங்கத்திடம் கோரிக்கை விடுத்தனர்.

இவ்வாறு தொழிற்றிட்டங்களைச் சமர்ப்பிப்பதன் மூலம் கைப்பணிகள் தொடர்பான ஆலோசனைகள், கடனுதவிகள் மற்றும் ஏனைய தேவைகள் என்பவற்றை நிறைவேற்ற முடியும் எனவும் தொழிற்றுறைத் திணைக்கள அதிகாரிகள் மேலும் கூறினர். (க-4-ரி)



திக்கம் பனஞ் சாராய வடிசாலையில் புதிய மதுசாரக் களஞ்சியக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் வைபவம் அண்மையில் நடைபெற்றபோது வடிசாலை பொது முகாமையாளர் ப.ரவீந்திரன் அடிக்கல் நடுவதைப் படத்தில் காணலாம். அருகில் வடிசாலை ஊழியர்களும், வடமராட்சிப் பிரதேச மதுவாப் பொறுப்பதிகாரி றோகான் சஞ்ஜே ராஜூவும் காணப்படுகின்றனர். (ஐ-109)

# வாசகர் திருமுகம்

## சிகை ஒப்பனையாளர் சங்கம் அளித்துள்ள விளக்கம்

'சிகை அலங்கரிப்பாளர் சங்கம் உரிய நடவடிக்கை எடுக்குமா?' என்ற தலைப்பில் 26.08.2001ஆம் திகதிய உதயனின் வாசகர் திருமுகம் பகுதியில் பிரசுரமான விவகாரம் குறித்து அனைவரினதும் கவனத்துக்காக பின்வரும் விடயங்களை முன்வைக்கின்றோம்.

யாழ்.சகி எந்தவொரு தனி நபரையோ, தனி நிறுவனத்தையோ சுட்டிக்காட்டவில்லை. எனினும் அவர் எடுத்துக்கொண்ட விடயம் இக்காலகட்டத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததும், அவசியமானதும் ஆகும். எமது சங்கம், உறுப்பினர்களுக்கு பல சுகாதார நடைமுறைச்சட்டங்களை புத்தக வடிவில் அச்சிட்டு வழங்கியுள்ளது. அத்துடன் அந்தச் சட்டங்களுக்கு அமைய நடக்காத உறுப்பினர்களைத் தீர விசாரித்து ரூபா 500க்குக் குறையாமல் அபராதமும் விதித்து வருகின்றது.

சமீபத்தில் நாம் கட்டணத்தை அதிகரித்திருப்பதாக யாழ்.சகி குறிப்பிட்டுள்ளார். 25.07.1999 அன்று நடைபெற்ற எமது பொதுக்கூட்டத்தில் பெரும்பான்மை அங்கத்தவர் மத்தியில் தீர்மானிக்கப்பட்ட கட்டணமே தற்போதும் நடைமுறையில் உள்ளது என்பதைத தெரியப்படுத்துகின்றோம்.

எனினும் சில கடை உரிமையாளர்கள் கட்டணம் தொடர்பான அறிவுறுத்தல்களை உரிய முறையில் பின்பற்றாததை அடுத்து சம்பந்தப்பட்டோரின் கவனத்துக்காக கட்டண விவரங்களை 23.06.2001 ஆம் திகதிய உதயனில் மீண்டும் பிரசுரித்திருந்தோம்.

சகியின் ஆதங்கம் ஒரு சவர அலகை ஒருவருக்கு மட்டுமே பயன்படுத்தவேண்டும் என்பதே. ஒன்றுக்கு மேற்பட்டோருக்கு ஒரே சவர அலகைப் பயன்படுத்துவதால் 'எய்ட்ஸ்' பரவும் அபாயம் உண்டு என்பதும் அவரது எண்ணம். இதனை நாம் மறுக்கவில்லை.

எமது சங்கத்தினால் அறிவுறுத்தப்பட்ட விதிமுறைகளை சிகை அலங்கரிப்பு நிலைய உரிமையாளர்கள் கடைப்பிடிக்கின்றனரா? என்பதை அவதானிக்க வேண்டியது வாடிக்கையாளர்களான தங்கள் அனைவரதும் கடமையே.

கட்டணத்தைக் குறைத்து தமது தேவையைப் பூர்த்தி செய்ய நினைக்கும் வாடிக்கையாளர்களின் நடவடிக்கைகளையும் இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும். இதனால் குறித்த சிலர் இலாபமடைகின்றனர். எனவே இத்தகைய நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதானால் ஒரேவழி வாடிக்கையாளர்கள் சவர அலகுகளைத் தாமே எடுத்துச்சென்று அதன் மூலம் சவரம் செய்துகொள்வதாகும்.

அதேவேளை சுகாதார விதிமுறைகளுக்குப் பங்கமாக நடந்து கொள்ளும் எமது உறுப்பினர்கள் பற்றியோ, நிலையங்கள் பற்றியோ தகவல்களை எமக்கு வழங்குவதும் தங்கள் அனைவரினதும் கடமையாகும். இதனைத் தட்டிக்கழிக்கக்கூடாது. யாழ்குடாநாட்டில் இறுக்கமாகக் கட்டிக்காக்கப்பட்டு வந்த கலாசாரம் சீரழிய சிகை ஒப்பனையாளர் நிலையங்கள் மட்டுமே காரணம் என்னும் யாழ்.சகியின் அபாண்டமான குற்றச்சாட்டை எம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாது. இது அவரது அறியாமையையே எடுத்துக்காட்டுவதாகவே நாம் கருதுகின்றோம்.

*யாழ்ப்பாணம்.* **சிகை ஒப்பனையாளர் சங்கம், யாழ்.மாவட்டம்.**

## நீதியற்ற இடமாற்றங்கள்

யாழ்.கல்வி வலயத்தில் உள்ள சில பாடசாலைகளுக்கு இடையே அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் சிலர் கடந்தவாரம் இடமாற்றம் செய்யப்பட்டிருக்கின்றனர்.

இந்த இடமாற்றங்களை உற்று நோக்கும் போது அவை எதற்காக மேற்கொள்ளப்பட்டன என்பதில் ஐயங்கள் எழுகின்றன.

தற்போதைய கல்வித் திட்டத்தின்படி மாணவர் மதிப்பீடு, கணிப்பீடு என்பன ஜி.சீ.ஈ. சாதாரணதர மாணவர்களின் இறுதிப் பெறுபேற்றில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவை. இந்நிலையில் ஜி.சீ.ஈ. சாதாரணதர வகுப்புகளுக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் பலரும் கூட இடமாற்றப்பட்டிருக்கின்றனர். இவர்களை வருட ஆரம்பத்தில் இடமாற்றம் செய்திருப்பின் அதனால் மாணவர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அதிகாரிகள் இப்போது திடீரென இந்த இடமாற்றங்களைச் செய்தது ஏன்?

அதிபர் தரத்தில் உள்ளவர்களின் சில இடமாற்றங்களும் யாழ். வலயத்தில் இடம்பெற்றிருக்கின்றன.

அவற்றில் உதாரணத்துக்கு ஒன்றைச் சுட்டிக்காட்டுகிறேன். யாழ். செங்குந்த இந்துக் கல்லூரியில் அதிபர் தரத்தில் இருவரும், பகுதித் தலைவராக ஒருவரும் பதவியில் இருந்தனர். மாணவர் எண்ணிக்கை 500க்குக் குறைவான பாடசாலையில் ஓர் அதிபரும் ஒரு பகுதித் தலைவரும் மட்டுமே கடமையில் இருக்க முடியும் என்ற கல்வித் திணைக்களத்தின் சுற்றறிக்கைக்கு அமைய அங்கு பதில் அதிபராகக் கடமை புரிந்தவர் நல்லூரில் உள்ள வேறு ஒரு பாடசாலைக்கு இடமாற்றப்பட்டிருக்கிறார். சுற்றறிக்கைக்கு அமைய ஆளணிக் குறைப்பு என்ற ரீதியில் அது நியாயமான நடவடிக்கைதான். ஆனால் இடமாற்றப்பட்டவரின் இடத்துக்கு நல்லூர் கோட்டத்தைச் சேர்ந்த வேறு பாடசாலை ஒன்றில் பணியாற்றிய ஒருவர் உடனடியாக உப அதிபராக மீண்டும் இடமாற்றப்பட்டு நியமிக்கப்பட்டிருக்கிறார். இது ஏன்?

ஆளணிக் குறைப்புக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?

ஒரு பாடசாலையில் மேலதிக ஆளணியை வைத்திருக்கக் கூடாது என்பதை இதன்மூலம் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீறவில்லையா?

இதுபோலவே தற்போது ஆசிரியர் இடமாற்றங்களும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள், ஆசிரியர் சங்கங்கள் இதற்கு விளக்கம் தரவேண்டும். தருவார்களா?

*திருநெல்வேலி.* **- ஒரு பெற்றார்.**

## ஆசிரியருக்கு ஒரு நியாயம் எழுதுநருக்கு ஒரு நியாயமா?

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் யாராவது பல்கலைக்கழகத்தில் உள்வாரியாகப் படித்தால் அவர்களின் வேலைக்கே உலை வைக்கின்றார் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் க.பரமேஸ்வரன். இவ்வாறு கல்வி பயிலும் பன்னிரண்டு பேருக்கு அவர் அண்மையில் பதவி விலக்கல் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளமை இதற்குச் சான்றாகும்.

ஆனால் வயைக் கல்வித் திணைக்களங்கள் உள்ளிட்ட பல திணைக்களங்களில் இலிகிதர்களாகவும் களஞ்சியப் பொறுப்பாளர்களாகவும் இருப்பவர்கள் தொடர்ந்தும் பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலுகின்றார்கள். இது அவரின் கண்களுக்குத் தெரியவில்லையா? அல்லது உரிய திணைக்களத் தலைவர்கள் இதனை எடுத்து அவருக்கு அறிவிக்கவில்லையா?

ஓர் ஆசிரியர் பல்கலைக்கழகம் செல்லும் போது வேறு ஒருவரைத் தனது கல்வியைப் புகட்ட பதில் ஒழுங்கு செய்துதான் செல்கின்றார். ஆனால் திணைக்களங்களில் களஞ்சியப் பொறுப்பாளர்களாகவுள்ளவர்கள் திறப்புக்களையும் தங்களுடன் எடுத்துச் செல்கின்றார்கள். அவர்கள் அறிவிக்கும் திகதிகளில் மாத்திரமே அதிபர்கள், ஆசிரியர்கள் கல்வித் திணைக்களத்தில் பொருள்களைப் பெறமுடியும். இதனைக் கேட்பார் இல்லையா? சட்டம், நீதி, நியாயம் யார் பக்கம் உள்ளது.

*புலோலி.* **ஆடலரசன்.**

# இருபதாம் நூற்றாண்டுக் கவிதைநடை இதுவெனக் காட்டிய மகாகவி பாரதி

**'மகாகவி' சுப்பிரமணிய பாரதியாரின் நினைவு தினம் இன்றாகும். அதனை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

இருபதாம் நூற்றாண்டுக்குரிய கவிதைத் தமிழை - உரைநடைத் தமிழை - பத்திரிகைத் தமிழை - எழுதிக்காட்டியவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் என்று விமர்சகர்கள் கூறுவார்கள். அது முற்றிலும் உண்மையே.

இருபதாம் நூற்றாண்டுக்குரிய கவிதை நடை இப்படித்தான் இருக்க வேண்டுமென்று தெளிந்த பாரதியார் சிந்து, கும்மி, கண்ணி என்று பல வடிவங்களில் பாடினார். அதே நேரத்தில ஆசிரியப்பா, கலிப்பா, வெண்பா, கட்டளைக் கலித்துறைகளிலும் பாடினார். ஆசிரியப்பா, கலிப்பா, வெண்பா கட்டளைக் கலித்துறை ஆகியவற்றையும் இருபதாம் நூற்றாண்டுக்கு ஏற்ப இலகுபடுத்தி அதிற் பெருவெற்றியும் கண்டார்.

அறுசீர் விருத்தங்களையும், எண்சீர் விருத்தங்களையும், யாப்பு இலக்கண அறிவு இல்லாதவர்கள் கூட ஓசையை வைத்துக்கொண்டே இயற்றக்கூடிய அளவுக்கு யாப்பை இலகு படுத்தினார்.

வெண்பாவும், கட்டளைக் கலித்துறையும் யாப்பு இலக்கண அறிவின்றி இயற்றுவது கடினமானது. இலக்கண நுட்பம் அமைந்த வெண்பா, கட்டளைக் கலித்துறைகளைக்கூட ஓசையைக்கொண்டே பிறர் இயற்றச் செய்த வித்தகர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.

பாரதியாரின் கவிதை நடைதான் இருபதாம் நூற்றாண்டுக் கவிதை நடை என்பதைப் பாரதியார் காலத்தில் வாழ்ந்தவர்களிற் சிலரே தெரிந்திருந்தனர். தொல்காப்பியம் முதலிய இலககண நூல்களையும் சங்க இலக்கியங்களையும் தமது பதினேழு வயதுக்குள்ளேயே கற்றுத் தெளிந்த பாரதிதாசன் அவர்கள் பாரதியாரின் கவிதைநடைதான் இருபதாம் நூற்றாண்டுக்குரிய கவிதை நடை என்பதை முற்றாகத் தெரிந்துகொண்டார். பாரதியார் அமரராகிப் பல வருடங்களின் பின்னரே பாரதியாரின் கவிதை நடைதான் இருபதாம் நூற்றாண்டுக் குரியது என்பதை எல்லோரும் ஏற்றுக்கொண்டனர்.

### வெண்பா

இலக்கண நுட்பம் நிறைந்த வெண்பாவை எப்படி இலகுவாகவும் இனிமையாகவும் ஓசை நயம் தோன்றவும் பொருள்நயம் சிறக்கவும் பாடினார் என்பதைப் பார்ப்போம்.

*செய்கதவம்! செய்கதவம்! நெஞ்சே*
*தவம் செய்தால்*
*எய்த விரும்பியதை எய்தலாம்! -*
*வையகத்தில்*
*அன்பிற் சிறந்த தவமில்லை!*
*அன்புடையார்*
*இன்புற்று வாழ்தல் இயல்பு.*

இந்த வெண்பாவின் ஓசை இனிமை பலமுறை பாடிப் பார்க்கத் தூண்டும். எளிமை வெண்பா எழுத ஆசைப்படுபவரைத் துணிந்து எழுதத் தூண்டும். இதுகொண்டிருக்கும் பொருட் சிறப்பு எவரையும் சிந்திக்கத் தூண்டும்.



செய்கதவம்! செய்கதவம்! என்று பாரதியாருக்கு முன்னரே சான்றோர்கள் பலர் மக்களைத் தூண்டி இருக்கிறார்கள். தவம் செய்தால் அடைய விரும்பியதை அடையலாம் என்றும் கூறி இருக்கிறார்கள். இவற்றை எல்லாம் பாரதியார் முன்னோர் மொழிந்தவாறே ஏற்றுக்கொண்டார். ஆனால் எது தவம் என்பதை விளக்குவதில் முன்னோரில் இருந்து வேறுபடுகிறார்.

அன்புதான் தவம் என்கிறார். வையகத்தில் அன்பிற் சிறந்த தவமில்லை என்று அடித்துக் கூறுகிறார். தவம் எது என்பதற்குப் பாரதியார் கொடுக்கும் விளக்கம் பாரதியார் பாடலைப்போலவே தனிச் சிறப்புடையது. அன்பு என்கிற தவத்தின் பயனை ஈற்றடியிற் கூறுகிறார்.

வெண்பாவின் ஈற்றடி, பல்லியின் வால் போன்றது என்பார்கள். பல்லியின் வால் பல்லியிலிருந்து துண்டிக்கப்பட்டாலும் துடிக்கும் இயல்பு கொண்டது. வெண்பாவின் ஈற்றடியும் வெண்பாவின் ஏனைய அடிகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டாலும் தனித்து உயிர்த்துடிப்புடன் விளங்கும் இயல்புடையது.

இன்புற்று வாழ்தல் இயல்பு என்ற ஈற்றடி, அன்பாகிய தவம் செய்தவர்கள் இவ்வுலகில் இன்புற்று வாழ்தல் இயல்பு என்ற பொருளைத் தருகிறது. ஆழ்ந்து பார்க்கையில் அன்பாகிய தவத்தைச் செய்தவர்கள் பிறவிப பயனாகிய வீடுபேறு உற்று இன்புற்று வாழ்தல் இயல்பு என்ற சிறப்புப் பொருளும் இருப பதைக் காணலாம்.

பாரதியார் இவ்வுலகில் முப்பத்தொன்பது ஆண்டுகளே வாழ்ந்தார். அந்த முப்பத்தொன்பது ஆண்டு வாழ்வில் உலகம் உள்ள வரை நிலைக்கும் பாடல்களைப் பாடினார்.உலகம் உள்ள வரை நிலைக்கும் புகழைப்பெற்றார். இவற்றுக்கெல்லாம் காரணம் என்ன?

பாரதியார் கவிதையைத் தொழிலாகக் கொண்டதுதான் காரணம். ஆசிரியத் தொழில், ஏர்த்தொழில், வணிகத் தொழில் என்று பல தொழில்கள் இருப்பதை நாம் அறிவோம். ஆனால் கவிதையும் ஒரு தொழில் என்பதைப் பாரதியார் சொன்னபிறகே நாம் தெரிந்து கொண்டோம். கவிதையைப் பொழுது போக்காகக் கொள்ளாமல் கவிதையைத் தொழிலாகக் கொண்டமையால்தான் பாரதியாரால் முப்பத்தொன்பது ஆண்டுகால இவ்வுலக வாழ்வில் இவ்வளவு தொகையான கவிதையை - அற்புதமான கவிதையை எழுதமுடிந்தது.

*நமக்குத் தொழில் கவிதை!*
*நாட்டிற்குழைத்தல்.*
*இமைப்பொழுதுஞ் சோராதிருத்தல்!*
*உமைக்கினிய*
*மைந்தன் கணநாதன் நங்குடியை*
*வாழ்விப்பான்*
*சிந்தையே இம் மூன்றுஞ் செய்.*

நமக்குத் தொழில் கவிதை என்றார். கவிதைத் தொழிலோடு பிறந்த நாட்டின் அடிமை விலங்கொடிக்கும் பணியையும் சேர்த்து நாட்டிற்கு உழைத்தல் என்றார். கவிதைத் தொழிலும் நாட்டிற்குழைத்தலும் சிறப்பாக நடைபெற இமைப்பொழுதுஞ் சோராதிருத்தல் வேண்டும் என்றார். முயற்சியில் வெற்றிபெறவும் நல்வாழ்வு பெறவும் கணநாதன் துணை என்பதை உமைக்கினிய மைந்தன் கணநாதன் நங்குடியை வாழ்விப்பான் என்றார்.

### எண்சீர் விருத்தம்

எண்சீர் விருத்தத்தை எவரும் எழுதக்கூடிய பெருமை பாரதியாருக்கும் அவரது சிஷ்யனாகிய பாரதிதாசனுக்குமே சொந்தம் என்று சொல்லலாம். பாரதியார் பாடிய விருத்தங்கள் அனைத்துமே இலக்கணச் சிறப்பும் ஓசை நயமும் கொண்டவை. எளிமை நயத்துக்கு இரு பாடல்களைப் பார்ப்போம்.

*பேரறமும் பெருந் தொழிலும்*
*பிறங்கு நாடு*
*பெண்களெலாம் அரம்பையர் போல்*
*ஒளிரும் நாடு*
*வீரமொடு மெய்ஞ் ஞானம் தவங்கள்*
*கல்வி*
*வேள்வி எனும் இவையெல்லாம்*
*விளங்கும் நாடு*
*சோரமுதற் புன்மை யெதும்*
*தோன்றா நாடு*
*பாரதர் தம் நாட்டினிலே*
*நாசமெய்தப்*
*பாவியேன் துணைபுரியும் பான்மை*
*என்னே!*

இந்த எண்சீர் விருத்தம் மலையிலிருந்து விரைந்தோடும் அருவிபோல தங்குதடையின்றி ஓடிச்செல்கிறது. ஓசைச் சிறப்புடன் காலத்துக்கேற்ற எளிமையையும் கொண்டுள்ளது.

பொருட் சிறப்பென்று பார்க்கும் போது மலையென நிமிர்ந்து நிற்கிறது. ஒரு நாட்டின் உயர்வுக்கு முதல் தேவையானது தர்மம் என்பதை விளக்க அறம் என்றார். அறவழியில் நிற்பினும் உயர்வுக்கு உழைப்புத் தேவையென்பதை விளககப பெருந்தொழில் பிறங்கும் நாடு என்றார். தமது நாட்டைக் காததுக் கொள்ள வீரம் தேவையென்பதையும் வீரத்தோடு விவேகமும் மெய்ப்பொருள் அறியும் அறிவும் தேவையென்பதை விளக்க வீரமொடு மெய்ஞ் ஞானம் உடைய நாடு என்றும் கூறினார். அத்துடன் கல்வி அவசியம் என்றும் குறிப்பிட்டார். திருட்டும் பிற குற்றங்களும் இல்லாத நாடு என்றும் கூறி நிறைவு கொண்ட ஒரு நாட்டை அழகுறக் காட்டினார்.

### அறுசீர் திருத்தம்

*தேவிநின் னொளி பெறாத*
*தேயமோர் தேயமாமே?*
*ஆவியங்கொண்டோ? செம்மை*
*அறிவுண்டோ? ஆக்கமுண்டோ*
*காவிய நூல்கள் ஞானக்*
*கலைகள் வேதங்கள் உண்டோ?*
*பாவியரன்றே நின்தன்*
*பாலனம் படைத்திலா தோர்?*

இது பாரதியார் இலகு நடையில் தந்த அறுசீர் விருத்தம். இலகுபடுத்தியபோதும் இலக்கண அமைதியோ, ஓசை நயமோ சிறிதும் பிசகவில்லை. மரபுக் கவிதையாகவே விளங்கும் இக்கவிதையில் பேச்சு மொழியின் இயல்பும் மருவி நிற்பதைக் காணலாம்.

**புலவர்**
**ம.பார்வதிநாதசிவம**

சுதந்திரதேவியின் ஒளி பெறாத தேசம், தேசம் இல்லையென்றும்! அத்தேசத்தில் உயிர் இல்லையென்றும், பொருட் செல்வமோ, கலைச் செல்வமோ இல்லையென்றும் கூறி ஈற்றில் அங்கு வாழ்பவர்கள் பாவியர் என்றும் கூறித் தான் சிந்தனைக் கவிஞன் என்பதை நிலைநாட்டுகின்றார் மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.

இருபதாம் நூற்றாண்டுக் கவிதை நடை தந்த பாரதியாரை அவரது சிஷ்யர் பாரதிதாசன் பாராட்டும்போது

*"உய்வகை காட்டும் உயர்த*
*மிழுக்குப்*
*புது நெறி காட்டிய புலவன் பாரதி"*

என்றும்

*"தமிழரின் உயிர் நிகர் தமிழ்நிலை*
*தாழ்ந்ததால்*
*தலைவனை எண்ணித்*
*தவங்கிடக்கையில்*
*இலகுபாரதிப் புலவன் தோன்றினான்"*

என்றும்

*"பழைய நடை பழங்கவிதை*
*பழந் தமிழ் நூல்*
*பார்த்தெழுப்பாரதியார் உயர்ந்தார்*
*இல்லை*
*பொழிந்திடு செவ்விய உள்ளம்*
*கவிதை உள்ளம்*
*பூண்டிருந்த பாரதியாராலே இந்நாள்*
*அழுந்தியிருந்திட்ட தமிழ்*
*எழுந்ததென்றே*
*ஆணையிட்டுச் சொல்லிவிடுவோம்*
*அன்னை மீதில்*
*அழகொளிசேர் பாரதியார் கவிதை*
*தன்னை*
*அறிந்திலதே புவி என்றால் புவி*
*மேற்குற்றம்"*

- என்றும் சிறப்பித்துக் கூறினார்.

காலத்தின் தேவை அறிந்து தமிழ் மொழிக்கு - தமிழ்க் கவிதைக்குப் புது வடிவம் வழங்கிய மகாகவி சுப்பிரமணிய பாரதியார் தமிழுக்குத் தொண்டு செய்த சான்றோருள் ஒருவர் ஆகின்றார். □

---

# பதவி பறிபோகும் 24 அமைச்சர்களும் 'சக்திமிக்க' பிரதி அமைச்சர்களாகத் திகழ்வர்

## சலுகைகள், பாதுகாப்பில் எந்த மாற்றமும் இல்லை

கொழும்பு,செப்.11

அமைச்சர்களின் எண்ணிக்கை 20ஆகக் குறைக்கப்படும் அதே சமயம் பதவியைப் பறிகொடுக்கும் 24 அமைச்சர்களும் 'சக்திமிக்க' பிரதி அமைச்சர்களாகத் திகழ்வார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சியைத் தொடர்வதற்கு வசதியாக ஜே.வி.பி. அதனுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டுள்ளதை அடுத்து தற்போது 44 அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவை அதன் எண்ணிக்கையை 20 ஆகக் குறைக்கவுள்ளது.

இதன்மூலம் சம்பந்தப்பட்ட அமைச்சரின் பணிகள் இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஒரு பகுதியைச் சம்பந்தப்பட்ட அமைச்சரும், மற்றைய பகுதியைப் பிரதி அமைச்சரும் (பதவியிழக்கும் அமைச்சர்) நிறைவேற்றுவார்கள்.

அமைச்சர்களின் எண்ணிக்கை 20 ஆகக் குறைக்கப்படுவதால், தற்போது தான் வைத்திருக்கும் சில முக்கிய அமைச்சரவைப் பொறுப்புக்களைவிட மேலும் சில அமைச்சரவைப் பொறுப்புக்களையும் ஜனாதிபதி ஏற்கவுள்ளார்.

ஜனாதிபதி அப்பதவிகளைப் பொறுப்பேற்றாலும் சக்திமிக்க பிரதி அமைச்சர்களே இவற்றைக் கையாள்வார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இந்தப் பிரதி அமைச்சர்களினது பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் வசதி வாய்ப்புகளிலும் எதுவித மாற்றங்களும் ஏற்படாது. இது வரை காலமும் இவர்கள் அனுபவித்த சலுகைகள் அனைத்தும் இவர்களுக்குக் கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (க)

## 21 பேர் கைது!

கொழும்பு,செப்.11

பண்டாரவளையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை முதல் மாலைவரை நடத்தப்பட்ட தேடுதலில் 21பேர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் அனேகர் பண்டாரவளை நகரப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப் பட்டது. (க-7)



**யாழ்ப்பாணம் நவீன சந்தையில் இயங்கிவரும் மக்கள் வங்கி காங்கேசன்துறைக் கிளையில் அண்மையில் மக்கள் வங்கியின் 40ஆவது ஆண்டுவிழா கொண்டாடப்பட்ட போது எடுக்கப்பட்ட படம்.**

**படத்தில் வங்கி முகாமையாளர் எஸ்.தங்கசிவம் உட்பட வங்கி ஊழியர்களும் காணப்படுகின்றனர். (ஜ-15)**

# பாலியல் வல்லுறவு புரிந்து 65 வயது மூதாட்டிக் கொலை!

## புத்தளம் பகுதியில் கொடூரம்

புத்தளம்,செப்.11

புத்தளம் பகுதியில் மூதாட்டி ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொலைசெய்யப்பட்டுள்ளார். கடந்த சனிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

புத்தளம் தேத்தாப்பளைக் கிராமத்தைச் சேர்ந்த வர்ணகுல சூரிய எலய்ஸ் பெர்ணாண்டோ (வயது 65) என்ற மூதாட்டியே கொலை செய்யப்பட்டவர் ஆவார்.

தோட்டம் ஒன்றில் தனிமையில இருந்த இந்த மூதாட்டி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக புத்தளம் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

வைத்திய பரிசோதனை நடத்திய புத்தளம் மாவட்ட வைத்திய அதிகாரி ஏ.இராமச்சந்தின் நெஞ்சுப்பகுதி கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளதாகவும், பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டமைக்கான அறிகுறிகள் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாகப் புத்தளம் பொலீஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (க)

### 13 பேருக்கு நிதியுதவி

பருத்தித்துறை நகரப் பகுதியில் வாளி மலகூடங்களை நீரடைப்பு மலகூடமாக மாற்றும் திட்டத்தின் கீழ் 13பேருக்கு தலா 7 ஆயிரத்து 500 ரூபா வீதம் பருத்தித்துறை நகர சபை நிதியுதவி வழங்கியுள்ளது. (க-173)

## வகுப்பறைக் கட்டடம்

தென்மராச்சி, செப். 11

பளை றோமன் கத்தோலிக் தமிழ் கலவன் பாடசாலைக்கென கட்டைவேலி மெதடிஸ்த மிஷன்த.க.பாடசாலை வளவில் இரண்டரை லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட வகுப்பறைத் தொகுதி நேற்றுத் தொடக்கம் பயன்படுத்தப்படுகின்றது.

இப்பாடசாலை இதுவரை கரவெட்டி மாணவர் கலாசாலையில் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பாடசாலைக்கு புதிய வகுப்பறைத் தொகுதி அமைப்பதற்கு அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா நிதி வழங்கியிருந்தார். (உ-117)

## பாணந்துறை நகரசபை கலைக்கப்பட்டது

கொழும்பு, செப். 11

பாணந்துறை நகரசபை வெள்ளியன்று நள்ளிரவு முதல் மேல் மாகாணசபை முதலமைச்சரால் கலைக்கப்பட்டுள்ளதாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

பாணந்துறை நகர சபையில் காணப்பட்ட சீரற்ற முகாமைத்துவம் மற்றும் நிர்வாகச் சீர்கேடுகள் காரணமாகவே அதனைக் கலைக்க வேண்டி ஏற்பட்டதாக மாகாண முதலமைச்சர் மேல் றெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார். (க-9)

## உதவிப்பண கொடுப்பனவு

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் மாதாந்த பொதுசன உதவிப் பணம், காசநோய் கொடுப்பனவு ஆகியவற்றைப் பெறுவோருக்கான — செப்ரெம்பர் மாத — கொடுப்பனவுகள் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களுக்கு பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி அஞ்சல் அலுவலகம், மந்துவில், மிருசுவில் ஆகிய உப அஞ்சல் அலுவலகம் ஆகியவற்றில் இக்கொடுப்பனவு பெறுவோருக்கு கரவெட்டி அஞ்சல் அலுவலகத்தில் இயங்கும் சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்தில் நேற்றுத் தொடக்கம் இக்கொடுப்பனவு வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொடிகாமம் அஞ்சல் அலுவலகம், விடத்தற்பளை, கச்சாய் ஆகிய உப அஞ்சல் அலுவலகம் ஆகியவற்றில் கொடுப்பனவு பெறுவோருக்கு அவை கொடிகாமம் அஞ்சல் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (உ-117)

## சேதங்களை மதிப்பிடும் பணி

சாவகச்சேரி நகரசபைக்கு ஏற்பட்ட சேதங்களை மதிப்பீடு செய்வதற்காகக் குழு ஒன்று கடந்த வாரம் அங்கு சென்றது.

நகரசபைத் தலைவர் பெ. தனபாலசிங்கம், செயலாளர் மு. செ. சரவணபவ வேலைகள் அத்தியட்சகர் து. சிவதேசராசா ஆகியோருடன் சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், வருமான சுகாதாரப் பிரிவுகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களும் அங்கு சென்றிருந்தனர்.

நகரசபை அலுவலகம், சாவகச்சேரி, மீசாலை, நுணாவில் ஆகிய இடங்களில் உள்ள பொது நூல் நிலையங்கள், பொதுச் சந்தை, நவீன சந்தை, நகர்ப்பகுதியில் உள்ள சபைக்குச் சொந்தமான கட்டடங்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் மதிப்பிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-117)

# கனேடிய இந்து ஆலயத்தில் புலிகளுக்கு நிதி சேகரிப்பு

## 'நஷனல் போஸ்ட்' விவரிப்பு

டொரன்டோ, செப். 11

கனடாவில் புதிதாகப் புனரமைக்கப்பட்ட நாட்டின் மிகப்பெரிதான ஆலயம் எனக் கருதப்படும்—விநாயகர் ஆலயம் விடுதலைப்புலிகளின் நிதி வளத்தைப் பெருக்குவதற்கு உதவுவதாக கனேடிய நாளிதழான 'நஷனல் போஸ்ட்' கடந்த வெள்ளிக்கிழமை செய்தி வெளியிட்டுள்ளது.

சுமார் 30 இலட்சம் டொலர்கள் செலவில் புனரமைக்கப்பட்டு, கடந்தவாரம் கும்பாபிஷேகம் இடம்பெற்ற குறிப்பிட்ட விநாயகர் ஆலயத்தை விடுதலைப்புலி ஆதரவாளர்கள் நிதி சேகரிப்புக்குப் பயன்படுத்தியதாக அப்பத்திரிகை தெரிவித்தது.

ஆலய நிர்வாகத்தின் செயலாளரான வெள்ளோட்டு பரவய்யா என்பவர் கூறுகையில், கும்பாபிஷேக விழாவின் இறுதி நாளான ஒகஸ்ட் 30 ஆம் திகதி, ஆலயத்தின் வாகனத் தரிப்பிடத்தின் ஒரு மூலையில், ஒரு மேசையில் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் படங்கள், விடுதலைப் புலிகளின் கொடிகள், பட்டிகள் மற்றும் ஒலி, ஒளி நாடாக்கள் போன்றவை விற்கப்பட்டதாகவும்—

நிதி சேகரிக்கும் உண்டியல்களும் காணப்பட்டதாகவும்—

இது தொடர்பாகப் பொலிஸாரை அழைத்து, மத வழிபாட்டில் தடங்கலையோ, வீணான குழப்ப நிலைமையையோ ஏற்படுத்தத் தாம் விரும்பவில்லை என்றும்—தெரிவித்ததாகச் செய்தியில் குறிப்பிடப்பட்டது.

தமது ஆலயத்தில் திரளும் அதிக ஈடுபாடு காட்டும் பக்தர்களில் 80 சதவீதத்துக்கும் அதிகமானவர்கள் அகதிகளாகவந்து கனடாவில் குடியுரிமை பெற்ற ஈழத் தமிழர்களே என்று சுட்டிக் காட்டிய ஆலய நிர்வாகத்தினர் இலங்கையில் இடம்பெறும் யுத்தத்தால் புலம் பெயர்ந்து வந்துள்ள அவர்களுக்கு ஆலயத்தில் உள்ள உரிமையைத் தாம் எப்படித் தடுத்து அவர்களை வெளியேற்ற முடியும்? என்று கேள்வி எழுப்பியதாக 'நஷனல் போஸ்ட்' தெரிவித்தது.

விடுதலைப் புலிகளின் ஆதரவு அமைப்புஎன்று கனேடிய புலனாய்வுத்துறையினரால் கருதப்படும் 'தமிழர் புனர்வாழ்வுக்கழகம்' என்ற அமைப்பைச் சேர்ந்தவர்கள், கும்பாபிஷேக விழாவின் போது திரண்ட சுமார் 20 ஆயிரம் பேரின் மத்தியில் உண்டியல்களை குலுக்கி நிதி சேகரித்தாகவும்—

ஆனால் சேகரிக்கப்படும் பணம் அகதிகளுக்கான நிதி என்று அவர்கள் வாதிட்டதாகவும் - அந்தக் கனடியப் பத்திரிகை மேலும் தெரிவித்தது.

வடஅமெரிக்கா விலேயே மிகப்பெரிய ஆலயமாகக் கருதப்படும் அந்த ஆலயத்தில், விடுதலைப் புலிகளுக்காக நிதி சேகரிப்பதைத் தாம் உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கவில்லை என்று ஆலய நிர்வாகத்தினர் கூறியதாகவும் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ)

## உள்ளூராட்சி ஊழியருக்கு பயிற்சி நெறி

சாவகச்சேரி, செப். 11

உள்ளூராட்சி மன்றங்களில் பணிபுரியும் உள்ளூராட்சி உதவியாளர்கள், வருமான மேற்பார்வையாளர்கள் — தரம் II, கணக்குப் பதிவாளர்கள் — தரம் II ஆ, எழுதுநர்கள் — தரம் II ஆ ஆகியோருக்கான பயிற்சி நெறி அடுத்த மாதம் முதல் வாரத்தில் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளதாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி சகல உள்ளூராட்சிச் சபைகளுக்கும் அறிவித்துள்ளார். (உ-31-117)

## விபத்தில் காயம்

யாழ்ப்பாணம், செப். 11

சித்தன்கேணி டச் வீதியில் நேற்றுக்காலை 9 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - கார் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்தார்.

மோட்டார் சைக்கிளை ஓட்டிவந்தவரான —காரை நகரைச் சேர்ந்த — இ. மணிமோகன் (வயது 28) என்பவரே படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-ரி)

# அமைச்சுகளைக் கண்காணிக்க ஜே.வி.பி. குழுக்கள் அமைப்பு

பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கும் ஜே. வி. பிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள உடன்பாட்டை அடுத்து—

ஒவ்வொரு அமைச்சுக்களின் அலுவலகங்களினது செயற்பாடுகளைக் கண்காணிக்க தனித்தனிக் குழுக்களை ஜே. வி. பி. நியமித்துள்ளது.

அமைச்சுக்களின் செயற்பாடுகளை அவதானிக்கவும் மக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் மற்றும் ஊழல் விடயங்கள் பற்றிக் கண்காணிக்கவுமே இந்தக் குழுக்களை ஜே. வி. பி. நியமித்துள்ளது.

வேலையற்ற பட்டதாரிகளில் ஐவர் வீதம் இக்குழுக்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும்—

சம்பளம் ஏதுமின்றி சேவை மனப்பான்மையுடன் அவர்கள் பணிபுரிவர் என்றும்—மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# சுகாதார சேவை ஊழியர்கள் அடையாள வேலை நிறுத்தம்

கொழும்பு, செப். 11

அரசு மருத்துவமனைகளில் பணியாற்றும் சுகாதார சேவை ஊழியர்கள் நாளை அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக இலங்கைச் சுகாதார சேவையாளர் சங்கத் தலைவர் டபிள்யூ. விமலரட்ன தெரிவித்தார்.

வடக்கு — கிழக்கு உட்பட நாடெங்கிலுமுள்ள அரசு மருத்துவமனைகளிலும் இந்த அடையாள வேலை நிறுத்தம் இடம்பெறும் என்றும் அவர் மேலும் கூறினார்.

சுகாதாரசேவைச் சங்கப் பணியாளர்களின் அடிப்படைச் சம்பளம் 8ஆயிரத்து 500 ரூபாவாக அதிகரிக்கப்படவேண்டும் —

அதுவரை 3 ஆயிரம் ரூபா இடைக்காலப்படி வழங்கப்படவேண்டும் —

சீருடை மற்றும் சம்பாத்து ஆகியவற்றுக்காக வருடத்துக்கு 6 ஆயிரம் ரூபா முற்பணம் வழங்கவேண்டும் —

—என்பன உட்பட சில கோரிக்கைகளை முன்வைத்தே அடையாள வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

சுமார் 30 ஆயிரம் பணியாளர்கள் இந்த வேலை நிறுத்தத்தில் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் —

நாளை தமது கோரிக்கைகளை வலியுறுத்தி கொழும்பு லிப்டன் சதுக்கத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்த உள்ளதாகவும் —

விமலரட்ன மேலும் தெரிவித்தார். (ஒ)

## மீண்டும் பழைய இடத்தில்

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த போக்கட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை நேற்றுத் தொடக்கம் மீண்டும் பழைய இடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது.

இடம் பெயர்வின் பின்னர் செயலிழந்த இப்பாடசாலையின் மாணவர்கள், இப்போது அப் பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்துள்ளதால் பாடசாலை நேற்று மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (11-7)

## இளைஞர் கைது

யாழ்ப்பாணம், செப். 11

புத்தூர் வாதரவத்தையைச் சேர்ந்த துரைராஜா சிவகுமார் (வயது 19) என்பவர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் அவரது வீட்டில் வைத்துப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக அவரது தந்தையான கனகசபை துரைராஜாவால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-3)

## வலி. தென்மேற்கு பிரதேசத்தில் சனசமூக நிலையங்களுக்கு நிதி வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம் செப். 11

வலி. தென்மேற்கு, மானிப்பாய் பிரதேசசபை தனது பிரதேசத்தில்உள்ள அனைத்து 'எ', 'பி' தரசனசமூக நிலையங்களுக்கு இந்த ஆண்டுக்கான நன்கொடையை வழங்கவுள்ளது.

இதற்கான முன்னேற்பாட்டுக் கூட்டம் நான்கு கட்டங்களாக வலி. தென்மேற்கு, மானிப்பாய் பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

சனசமூகநிலையத்தலைவர், செயலாளர், பொருளாளர் தவறாது ஆவணங்களுடன் சமூகம் கொடுத்து விண்ணப்பப்படிவங்களை உடன் பூரணப்படுத்தி வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் பட்டினத்திற்குட்பட்ட சனசமூக நிலையத்திற்கு எதிர்வரும் வியாழக்கிழமையும்—

மானிப்பாய் கிராம அலுவலகத்திற்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு மறுநாள் வெள்ளிக்கிழமையும்—

பண்டத்தரிப்புபட்டின அலுவலகத்திற்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு எதிர் வரும் 18ஆம் திகதியும்—

பண்டத்தரிப்பு கிராம அலுவலகத்திற்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு எதிர் வரும் 19 ஆம் திகதியும்—

மானிப்பாய் பிரதேச சபை ரவீன்ஸ் சலாசார மண்டபத்தில் கூட்டங்கள் இடம்பெறவிருக்கின்றன. (உ-185)

## கொடிகாமம் ஓய்வூதியருக்கு

கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுவோருக்கான செப்ரெம்பர் மாத ஓய்வூதியக் கொடுப்பனவு நாளை புதன்கிழமை கொடிகாமத்தில் வழங்கப்படுமெனவும், ஏனைய நாள்களில் நெல்லியடியில் இயங்கும் சங்க அலுவலகத்தில் வழங்கப்படுமெனவும் சங்கப் பொது முகாமையாளர் ச. யோகராசா அறிவித்துள்ளார். (உ-117)

## சிவபாலன் சிரார்த்த தினம்

யாழ்ப்பாணம், செப். 11

யாழ். மாநகரசபையின் முன்னாள் முதல்வரான அமரர் பொன். சிவபாலனின் மூன்றாவது சிரார்த்த தினம் இன்று செவ்வாய் காலை 9-30 மணிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி, யாழ்ப்பாண அலுவலகத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதையொட்டிய அஞ்சலி நிகழ்வுகள் யாழ். மாநகரசபை துணை முதல்வர் செல்லன் கந்தையன் தலைமையில் இடம்பெறவுள்ளன. (உ-3)

## பாரதியார் விழா

யாழ்ப்பாணம். செப் 11

மகாகவி பாரதியார் விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரிப் பட்டதாரிகள் கல்வி பகத்தில் இடம்பெறவுள்ளது.

'பாரதி — அன்றும் இன்றும்' என்னும் தலைப்பில் பேராசிரியர் கலாநிதி எஸ். ஜெயந்நேசன் சிறப்புரையாற்றுவார். அதைத் தொடர்ந்து க. சிவராமலிங்கம்பிள்ளை தலைமையில் பட்டிமன்றம் இடம்பெறும். யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை விரிவுரையாளர் திருமதி கிருஷாந்தி இரவீந்திரா குழுவினரின் நாட்டிய நாடக நிகழ்ச்சியும் நடைபெறும். (உ-3)

## மிதிவெடியில் சிக்கி குடும்பஸ்தர் காலை இழந்தார்!

தென்மராட்சி, செப். 11

தென்மராட்சி கெருடாவில் பகுதியில் தேங்காய் பறிப்பதற்காக நேற்றுக்காலை சென்ற மூன்று பிள்ளைகளின் தந்தையான அரசன் இராஜேஸ்வரன் (வயது 30) என்பவர் மிதிவெடியில் சிக்கித் தனது இடதுகாலை இழந்தார்.

மந்திகை ஆஸ்பத்திரியில் இவர் சிகிச்சை பெற்று வருகின்றார்.

கடந்த சில வாரங்களுக்குள் இந்தப் பகுதியில் மூவர் மிதிவெடிகளில் சிக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-17-173)

## சங்காபிஷேகம்

புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலைமன்ற முதல்வி அம்மன் கோயில் கும்பாபிஷேக தினம் எதிர்வரும் 13 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

இதனையொட்டி அன்றைய தினம் அஷ்டோத்திர சங்காபிஷேகம் இடம்பெறும். (க-173)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/மயிலணி சைவ மகாவித்தியாலய
அதிபர்
**திரு.தங்கசாமி ஐயர் சற்குணசர்மா**
அவர்கள்

அதிபர் தரம் I இற்கு **01.06.1996** முதல் பதவி உயர்வு பெற்றமையையிட்டு அவரை உளமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

உபஅதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், சகஊழியர்கள், பா.அ.சங்கம். (92158)

# தேவை

யாழ்.நகரில் இயங்கும்
பாதணி விற்பனை நிலையம் ஒன்றுக்கு-
லிகிதர் / சிட்டை எழுதுநர்
விற்பனையாளர்கள் தேவை
முன் அனுபவமுள்ள
இருபாலாரும் விரும்பத்தக்கது. எதிர்வரும் 20-09-2001ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

(92154) விளம்பர இல.1363, மே/பா.உதயன்.

# கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்களத்தில் விலைமதிப்பீட்டுப் பரிசோதகராகக் கடமையாற்றும்
**திரு.வைரமுத்து செல்வநாயகம்**
அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி வைரமுத்து மாணிக்கம்

அவர்கள் நேற்று (2001.09.10) காலமாகிவிட்ட செய்திகேட்டு துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

92166) யாழ்.விலைமதிப்பீட்டுத் திணைக்கள நலன்புரிச் சங்கம்.

# முதலாம் ஆண்டு நிறைவு நினைவஞ்சலி





அமரர் Dr.செ.செல்வப்பிரகாசம் — திருமதி செ.இராஜேஸ்வரி

25-06-1919 → மலர்வு ← 22-08-1928
10-04-2000 → உதிர்வு ← 23-08-2000
அபரபக்க ஷஷ்டி → திதி ← அபரபக்க நவமி (11-09-2001)

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

*எமது பெற்றோருக்கு இதய அஞ்சலிகள்.* (92093)

*30, ஸ்ரேசன் றோட்,*
*கோண்டாவில் மேற்கு.*

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்

## திருமதி இராசரத்தினம் அன்னமுத்து

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் 46/1, பிறவுண் வீதி, நான்காம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசரத்தினம் அன்னமுத்து நேற்று (10.09.2001) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினத்தின் மனைவியும், துரைராஜா (வவுனியா), தவனேஸ்வரி (ஜேர்மனி), கனகேஸ்வரி ஆகியோரின் தாயாரும், ஜீவரட்ணம், இராசமலர், சிதம்பரநாதன், சுசீலாதேவி, மகேந்திரன், பாலகிருஷ்ணன் ஆகியோரின் சிறிய தாயும், சகுந்தலாதேவி, கோபாலசிங்கம், காலஞ்சென்ற ஆறுமுகம், இராஜலக்சுமி மற்றும் கந்தசாமி (வட்டுக்கோட்டை), நகுலமீரா, காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் ஆனந்தி, கெங்காதேவி ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் கனகாம்பிகை கந்தசாமி (மலேசியா), சிந்தாமணி (சுவீடன்), நாகம்மா (திருகோணமலை) ஆகியோரின் சகோதரியும், ரஞ்சினி, ராகினி (ஜேர்மனி), சாந்தினி (ஜேர்மனி), மாலினி (சுவீடன்), சிறிதாஸ் (கனடா), சிவமலர் (சுவீடன்), ஜெயந்தி (ஜேர்மனி), சிவகுமார் (லண்டன்), ஜெயதாஸ் (சுவீடன்), விஜயதாஸ் (ஜேர்மனி), சிவானந்தன் (உரிமையாளர் சிவா மில், பிள்ளையார் மில்), சதானந்தன் (ஜேர்மனி), யோகரட்ணம் (ஜேர்மனி), ராதாகிருஷ்ணன், புஸ்பலதா, ஜீவதாஸ் (சுவீடன்), ராணி (கனடா), புஸ்பகாந்தி (சுவீடன்), கவிதா (லண்டன்), மோகனதாஸ் (சுவீடன்), மோகன் (ஜேர்மனி), சசி (ஜேர்மனி), ரஜிநா, பிரேமாநிதி, இராசேந்திரம், பிரபா, ரூபி, ஷாமினி ஆகியோரின் பேர்த்தியாரும், கம்ஷலா, ரகுராமன், சிந்துஜா, தாரகா, நிரோசன், அனுஷாந்த், நிலக்ஷன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2001) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வ.சிவானந்தன்,
*(சிவா மில், பிள்ளையார் மில்)*

*46/1, 4ஆம் ஒழுங்கை,*
*பிறவுண் வீதி,* (92160)

# 8 ஆசிரியருக்கு கலாசாலைக்கான பாடமாற்றக் கடிதங்கள்

யாழ்ப்பாணம்,செப்.11

ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சியை மேற்கொள்வதற்கென 8 ஆசிரியர்களுக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் பாடமாற்றம் செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட கடிதங்கள் மேலதிக மாகாணக் கல்விப் பணிமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அண்மையில் நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலையில் இடம்பெற்ற நடமாடும் சேவையில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் மேற்படி பாடமாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

பாடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களின் பெயர், விவரங்கள் வருமாறு:-

திருமதி சுபாஜினி கஜபாகு (சண்டிலிப்பாய் இந்து), விஜிதா இராசையா (துன்னாலை மெ.மி.த.க. பாடசாலை), சத்தியபாமா சற்குரு (கரணவாய் ம.வி.), அமிர்தராணி கந்தப்பு (விக்கினேஸ்வராக் கல்லூரி) -

சுதர்சினி சண்முகநாதன் (அராலி சரஸ்வதி ம.வி.), சத்தியமலர் சத்தியசீலன் (நாவற்குழி ம.வி.), சுப்பிரமணியம் சுதாமதி (ஏழாலை ம.வி.), துரைசிங்கம் தாரணி. (க-10-ரி)

# ரூ.27 லட்சம் செலவில் நுண்கருத் திட்டங்கள்

யாழ்ப்பாணம்,செப்.11

யாழ்.மாவட்டத்தில் அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தினால் 27 லட்சம் ரூபா செலவில் மேலும் சில நுண்கருத்திட்டங்கள் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ளன.

மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்களின் விவரங்கள் வருமாறு:-

☆ பிரதேச செயலர் பிரிவுகள் தோறும் உள்ள மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள வலது குறைந்தோருக்கான முச்சக்கர வண்டிகள் மற்றும் சக்கர நாற்காலிகள் என்பவற்றை 'ஜெய்ப்பூர்' நிறுவனத்தின் ஊடாகத் திருத்தம் செய்வதற்கு - 13 லட்சம் ரூபா.

☆ வடமராட்சி மற்றும் வலிகாமம் பகுதிகளில் உள்ள நலன்புரி நிலையங்களில் மலசலகூடங்கள் அமைப்பதற்கும் பழுதடைந்த மலசலகூடங்கள் திருத்துவதற்கும் - 8 லட்சத்து 90 ஆயிரம் ரூபா.

☆ உடுவில், சங்கானை, கோப்பாய் மற்றும் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள நலன்புரி நிலையங்களில் 8 கிணறுகள் அமைப்பதற்கு - 2 லட்சத்து 20 ஆயிரம் ரூபா.

☆ கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பத்தமேனி நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள பொருளாதார ரீதியாக நலிவடைந்த 33 குடும்பங்களுக்கு சுயதொழில் முயற்சிக்கான சுழற்சி முறைக்கடன் வழங்குவதற்கு - 3 லட்சத்து 25 ஆயிரம் ரூபா. (க-10-ரி)

# சம்பள நிலுவை பட்டியல்களை அனுப்ப கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.11

யாழ்.மாவட்ட பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களுக்கான சம்பள நிலுவைகள் தொடர்பான விவரங்களை வலயரீதியாக உடன் அனுப்பிவைக்குமாறு வடக்கு, கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதான கணக்காளர் கோரியுள்ளார்.

இந்த விவரப் பட்டியல்கள் மாகாணத் திறைசேரிக்கு அனுப்பப்பட வேண்டியுள்ளதால் இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அவற்றை அனுப்பி வைக்குமாறும் 15ஆம் திகதிக்கு முன்பு அவை கிடைக்கப்பெறாவிடின் 2002ம் ஆண்டிற்குரிய மதிப்பீட்டில் சேர்க்கமுடியாது போய்விடுமெனவும் மாகாணக் கல்வி அமைச்சின் பிரதான கணக்காளரினால் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-ரி-10)

# தேவை

எமது அச்சகத்துக்கு
☆ கணனி இயக்குநர்கள்
☆ தமிழ், ஆங்கில ஒப்புநோக்குநர்கள்
தேவைப்படுகின்றனர்.
*இருபாலாரும் நேரில் வரவும்.* (92163)

**பிள்ளையார் அச்சகம் பிறைவேற் லிமிட்டெட்,**
676, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

## சோ. ஸ்ரீவர்சினி

கரவெட்டி, வதிரி உல்லியநொல்லை,
அம்மன் கோயில் வீதியைச் சேர்ந்த
**திரு.திருமதி சிவஸ்ரீ பா.சோமசுந்தரக் குருக்கள்**
தம்பதிகளின் ஏக புத்திரி

**ஸ்ரீவர்சினி**

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (11.09.2001) செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை பெற்றோர் மற்றும் உறவினர்கள் பல்லாண்டு காலம் சீரோடும் சிறப்போடும் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்:
**பெற்றோர்.**

*கரவெட்டி, வதிரி.* (92162)

# திங்கள் ஒன்றின் நினைவுகள்



மண்ணில் 18 - 07 - 1933
விண்ணில் 12 - 08 - 2001

அமரர்

## சின்னையா தவமணி

எங்கள் அன்பின் பிறப்பிடமே!
எங்கள் இதயப் பேரொளியே!
எங்கள் பாசத் திருவுருவே!
எங்கள் அறிவுப் பாசறையே!
எங்களை உயர்வுற வைத்தவரே!
எங்களைப் பிரிந்து நீர்சென்று
திங்கள் ஒன்று ஆனாலும்
தினமும் நினைக்கும் எம்நெஞ்சே!

இன்று (11-09-2001) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் எமது குடும்பத்தலைவரின் சபிண்டிகரணக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*ஆஸ்பத்திரி முன் வீதி,*
*நாயன்மார்கட்டு,*
*யாழ்ப்பாணம்.* (92161)

- மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 24 - 12 - 1924
மறைவு 12 - 08 - 2001

## திருமதி அன்னம்மா சுப்பிரமணியம்

அன்போடும் பண்போடும் வாழ்ந்து நல்ல வழியில் நாம் வாழ எம்மை உருவாக்கிய எமது அன்புத் தெய்வமே! உங்கள் நினைவு என்றும் எம்மைவிட்டு நீங்காது, பசுமையாய் எம் நெஞ்சில் என்றும் பதிந்திருக்கும். உங்கள் ஆத்ம சாந்தி அடைவதாக.

2001.08.12 இல் அமரத்துவம் அடைந்த எமது அன்புத் தாயாரின் பிரிவுச்செய்தி கேட்டு எம் இல்லம் நாடிவந்து, எமது துயரில் பங்கு கொண்டு, எமக்கு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இறுதிக் கிரியைகளின்போது எமக்குப் பல வழிகளிலும் உதவிகள் புரிந்து ஆறுதலளித்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்களுக்கும் மற்றும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்ட வடபிரதேச போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டு, இன்று (11.09.2001) செவ்வாய்க்கிழமை நடைபெறுகின்ற ஆத்ம சாந்திப் பிரார்த்தனை, மதியபோசனம் ஆகியவற்றில் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

*அளவெட்டி தெற்கு,*
*அளவெட்டி.*

தகவல்:
ஞானசேகரம் (மகன் - C.T.B) (92155)

## பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமைக் காரியாலய

## கட்டடத்துக்கான அடிக்கல் நடும் விழா அழைப்பு

பேரன்புடையீர்!

நாளை (12.09.2001) புதன்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் 10.00 மணிவரை உள்ள சுபமுகூர்த்த வேளையில், பரு.பல நோ. கூட்டுறவுச் சங்கக் காணியில், பணிமனை கட்டுவதற்கு திருவருள் பாலித்துள்ளது.

இந்தக் கட்டடத்துக்கான அடிக்கல்லை பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் உயர்திரு.ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் அவர்கள் நட்டு வைப்பார்கள்.

ஆகவே இந்த வைபவத்துக்கு பணிப்பாளர்கள், பணியாளர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பரு. ப.நோ.கூ.சங்கம்.* (C/18217) - பொதுமுகாமையாளர்.

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

## கேள்வி அறிவித்தல்

என்னால் பகிரங்கப்படுத்தப்பட்ட 2001.09.07ஆம் திகதிய கேள்வி அறிவித்தலில் வேலைகளுக்கான கால எல்லைகள் பின்வருமாறு முற்திகதியிடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

கேள்வி ஏற்றுக்கொள்ளல் 2001.09.19 ஆம் திகதி 12.00 மணிவரை.
கேள்வி திறத்தல் 2001.09.19ஆம் திகதி 12.30 மணி.

*வலி. தெற்கு பிரதேச சபை,* க.கமலசேகரன், ஜே.பி.யு.எம்.
*சுன்னாகம்.* தலைவர்,
*2001. 09. 10.* (C/18221) வலி.தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

## யாழ். மத்திய கல்லூரியில் இலவசக் கணனிப் பயிற்சி

யாழ் மத்திய கல்லூரியின் முறைசாராக் கல்வி பிரிவு முற்றிலும் இலவசமாகக் கணனிப்பயிற்சி நெறியொன்றை எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை முதல் ஆரம்பிக்க உள்ளது.

1999,2000 மற்றும் 2001 ஆகிய ஆண்டுகளில் யாழ்.மத்திய கல்லூரியில் பயின்று ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சைகளில் தோற்றிய சகல மாணவர்களும் இந்தப் பயிற்சிநெறியில் இணைந்து கொள்ளலாமென்றும் -

இதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னதாக கல்லூரி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறும் -

விண்ணப்பப் படிவங்களை கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் - அதிபர் க.இராசதுரை தெரிவித்தார்.

எக்காரணம் கொண்டும் பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## எதிர்பாராத விபத்தில் புலி உறுப்பினர் உயிரிழப்பு!

வவுனியா,செப்.11

திடீரென இடம்பெற்ற விபத்தொன்றில் ஒரு போராளி உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை முல்லை மாவட்டத்தில் இடம்பெற்ற எதிர்பாராத விபத்தொன்றில் மேஜர் யாழ்வேந்தன் (அழகரட்ணம் அரவிந்தன் - யாழ்ப்பாணம்) என்ற போராளியே உயிரிழந்தாக 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்தது. (ஒ)

## பள்ளிமுனையில் சுற்றி வளைப்பு; 6 பேர் கைது!

வவுனியா,செப்.11

மன்னார் பள்ளிமுனைப் பகுதியில் நேற்றுப் பகல் இராணுவத்தினர் பாரிய சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சுற்றிவளைப்பின்போது 6 இளைஞர்கள் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

பள்ளிமுனைப் பகுதியைச் சுற்றி வளைத்த படையினர், அங்கிருந்து எவரையும் வெளியில செல்லவோ, வெளியிலிருந்து உட்பிரவேசிக்கவோ அனுமதிக்கவில்லை என்றும் கூறப்பட்டது. (ஒ)


Silver Shield

தயாரிப்புக்களான
சொக்ஸ் வகைகள்,
நூல்வகைகள்,
பெனியன்கள்
பலதரப்பட்ட
CURVFORM BRASSIERS
இன்னும்
TRACING PAPER,
PLATE PAPER,
LAMINATING PAPER - முதலானவற்றைக் கொழும்பு விலையில் பெற்றுக்கொள்ள:



Srimurugan
303, K.K.S.Road, Jaffna.
Tel:- 021-3588, 2670 Fax:- 3214, email:-del smskr@euraka.lk
குறிப்பு:- பாடசாலைகளுக்கும் மொத்த வியாபாரிகளுக்கும் விசேட கழிவு வழங்கப்படும்.
(C/18102)



ராஜா யாழ்ப்பாணம்
அர்ஜுன், சோனாலி
மற்றும் பலர் நடிப்பில்
கண்ணோடு காண்பதெல்லாம்
தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு :- 10.30, 2, 5 (புதிய நேரம்)
(C/18074)

நாகம்ஸ் சுன்னாகம்
ரஜனி, குஷ்பூ, விஜயசாந்தி
நடிப்பில்
மன்னன்
(ரீல்ஸ்)
காட்சிகள்:- 11.00, 2.30 (புதியநேரம்)
(92165)

லஷ்சுமி இணுவில்
குதூகல ஆரம்பம்
விஜய், தேவயானி
நடிப்பில்
ப்ரெண்ட்ஸ்
(ரீல்ஸ்)
STR பிலிம்ஸ்
காட்சிகள்:- 11.00, 2.30 (புதியநேரம்)
(92169)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

## பல்கலைக்கழக அனுமதி - 2001/2002

## கற்கைநெறி - கலை - விசேட அனுமதி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 2001/2002 கல்வியாண்டுக்கு விசேட அனுமதியின் உயர்தரப் பரீட்சையில் கீழ்க்குறிப்பிட்ட பாடங்களில் சித்திபெற்ற மாணவர்களுள், தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் **இன்னுமொரு** பெயர்ப் பட்டியல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்டு, கலைப்பீடாதிபதி அலுவலக விளம்பரப் பலகையில் இடப்பட்டுள்ளது. அனுமதிபெற்ற மாணவர்கள் தங்கள் பதிவுகளை 2001.09.21 ஆம் திகதிக்கு முன் மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

| | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1) மெய்யியல் | - 25 |
| 2) வரலாறு/ தொல்லியல் | - 21 |
| 3) கிறிஸ்தவ நாகரிகம் | - 20 |
| 4) மொழியியல்/ இந்துநாகரிகம் | - 124 |
| 5) மனைப்பொருளியல் | - 06 |
| 6) ஆங்கிலம் | - 01 |
| 7) புவியியல் | - 11 |
| 8) சமஸ்கிருதம் | - 03 |
| 9) நாடகமும் அரங்கியலும் | - 27 |

கலை கற்கைநெறிக்கு தெரிவுசெய்யப்பட்ட புதிய மாணவர்களுக்கான வரவேற்பும், வழிகாட்டல் நிகழ்வும் 2001.09.14 ஆம் திகதி நடைபெறவுள்ளதால், அனுமதி கிடைத்த சகல மாணவர்களையும் இந்நிகழ்வில் பங்குகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

**பதிவாளர்,**
**2001.09.18.** (C/18224)

## வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்

## கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைக்கான கேள்விகள் வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற தலைவரால் 2001 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை (28.09.2001) முற்பகல் 11.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் உடனடியாகத் திறக்கப்படும்.

01. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் இக்ராட் (ICTAD) கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கு கீழே குறிப்பிடப்படும் தரங்களையுடைய அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மட்டும் கேள்விப் பத்திரங்கள் கோருவதற்குத் தகுதியுடையோராவர்.
02. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப்புத்தகத்தை அலுவலகத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. தகுதியுடையோர் மட்டும் கீழ் காணும் அட்டவணைப் பிரகாரம் உரிய கட்டணங்களை வல்வெட்டித்துறை நகராட்சிமன்ற அலுவலகத்தில் செலுத்தி பற்றுச் சீட்டைப்பெற்று கேள்விப்பத்திரங்களை 2001ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 21ஆம் திகதி (21.09.2001) பிற்பகல் 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விவரம் | பதிவு செய்யும் தரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் (பொ.சே.வரி உட்பட) |
|---|---|---|---|
| வல்வெட்டித்துறை நகரசபைக் கட்டடம் அமைத்தல் (கட்டம் - IV) | M-8 | 16000/= | 562.50 |

04. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டுமே விநியோகிக்கப்படும்.
05. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். மேலதிக விவரங்களை வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத் தலைவரிடமிருந்து வேலை நாள்களில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
06. நிதி ஏற்பாடு இல்லாதிருக்கும் பட்சத்தில் கேள்வி இரத்துச் செய்து வைப்புப்பணம் மீளளிக்கப்படும்.

எம்.கே.சிவாஜிலிங்கம் J.P.U.M.
*நகராட்சிமன்ற அலுவலகம்,* தலைவர்,
*வல்வெட்டித்துறை. 06.09.2001.* (C/18226) நகராட்சி மன்றம்,வல்வெட்டித்துறை.

## தலைமைக் காரியாலயம் இடம்மாற்றம்

இற்றைவரை யாழ்ப்பாணம் இல.833, ஆஸ்பத்திரி வீதியில் இயங்கி வந்த

**திக்கம் வடிசாலைக்குரிய தலைமைக் காரியாலயம்**

நேற்று 10.09.2001 திங்கட்கிழமை முதல் நெல்லியடி யாழ்ப்பாண வீதியில் அமைந்துள்ள நாவலர் மடத்தடியில் இயங்கி வருகின்றது என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

பொது முகாமையாளர்,
திக்கம் வடிசாலை,
(C/18220) அல்வாய்.

## மரண அறிவித்தல்கள்

### தாமோதரம் விநாயகமூர்த்தி (வேதம்)

(இளைப்பாறிய பிரதம எழுதுநர் -
உதவி அரசாங்க அதிபர் பணிமனை, பருத்தித்துறை)

துன்னாலையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட தாமோதரம் விநாயகமூர்த்தி (வேதம்) 09.09.2001 ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு காலமானார்.

அன்னார் திலகவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கமலாசனி மற்றும் கேதீஸ்வரன் (ஆண் தாதிய உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்), ஜெகதீஸ்வரன் (ஜேர்மனி), பத்மாசனி (மொழி பெயர்ப்பாளர் - கொழும்பு), சரகணபதீஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், சுதாகர் (சாலை முகாமையாளர் - கல்முனை), இந்திராதேவி, கௌரி (ஜேர்மனி), சுகுணா (கொழும்பு) ஆகியோரின் அன்புமிகு மாமனாரும், கேமசிந்துஷா, கேமசாளினி, டிலக்ஸிகா, நிருஷா, நிதீபதா, லக்ஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும், புஷ்பராணி, கணபதிப்பிள்ளை, சிவகுமார், செல்வானந்தன், மனோரஞ்சன், சிவரஞ்சினி, சிவகலா, மதிவண்ணன் ஆகியோரின் ஆசையப்பாவும் மதியாபரணத்தின் அத்தானுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2001) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஒடைக்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
*"திலகஸ்தான்",* மனைவி,பிள்ளைகள்,
*துன்னாலை கிழக்கு,* மருமக்கள்,
*கரவெட்டி.* (C/18225) பேரப்பிள்ளைகள்.

### திருமதி பொன்னரியம் செல்லத்துரை

இராமநாதன் வீதி, கலட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னரியம் செல்லத்துரை நேற்று (10.09.2001) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை நாகமுத்துவின் அன்பு மனைவியும், துரைசிங்கம், தவமணி (கனடா), தங்கமணி ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவமணி கோபாலசிங்கம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற இரத்தினம், செல்லையா, அப்புத்துரை இராசா மற்றும் சின்னத்துரை, கண்மணி, கந்தசாமி (கொழும்பு), பாக்கியம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், தயானந்தன் (கனடா), தயாசீலன் (கனடா), குமுதினி (கனடா), சுபாசினி (கனடா), மனோகரி (ஆசிரியை, யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்), மணிவண்ணன் (பிரான்ஸ்) ஆகியோரது அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2001) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் இராமநாதன் வீதி, கலட்டியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
*34/12, இராமநாதன் வீதி,*
*கலட்டி, யாழ்ப்பாணம்.* (92168) து. மனோகரி (பேர்த்தி)

# ANNEXURE

## CHUNDIKULI GIRLS' COLLEGE JAFFNA

## ANNUAL PRIZE GIVING - 2001

**Saturday the 15th September, 2001 at 10.00 a.m. (New Time)**

**Chief Guests**

Dr. Arul Anketell - *M.B.B.S., D.C.H.(Ceylon)*
*South Asia Regional Promoter, Health Care Christian Fellowship*
and
Mrs. Ranjini Anketell - *B.Sc. Agriculture*
*Administrator HCF South Asia Base.*

**Chairperson**

Mrs. Mahilaruppiam Rajasingam
*Manageress - Chundikuli Girls' College.*

Parents, Old Girls & Wellwishers are cordially invited.

(C/18218) **Principal, Staff & Students.**



## நவீன கணனிகள் நம்பமுடியாத விலையில்



**Pentium 4 (1.4 GHz)**

Rs. 89,500/= மட்டுமே

மேலும் ரூபா 55,000/= இல் இருந்து......
**IBM Cyrix-333, Pentium III 633, PentiumIII 866, PentiumIII 933, PentiumIII 1000**

தரமான கணனிகளையும் கணனி உதிரிப்பாகங்களையும் நியாயமான விலையில், உத்தரவாதத்துடன் பெறுக்கொள்ளக் கூடிய ஒரே ஒரு நிறுவனம் IIS

கணனிகளை கொள்வனவு செய்யும் ஒவ்வொருவரும் 2 நபர்களுக்கு இலவசமான கணனிப் பயிற்சியை IIS இல் பெறுகொள்ள முடியும்

IIS விற்பனைப் பிரிவு,
100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
TP. No : 2831


## புலிகளின் தாக்குதலில் சிப்பாய் பலி !

கொழும்பு,செப்.11

வவுனியா மருதமடுப் பகுதியில் நேற்று முன்தினம் காலை 8.30 மணியளவில் ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாகவும் -

இதில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றொரு சிப்பாய் காயமடைந்து சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாகவும் - விசேட ஊடகத் தகவல் நிலையம் நேற்று விடுத்த கள நிலைவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (ஒ)


## UNIVAC College of Computer Information Technology

British ACP Recognized Computer Training Centre

போட்டிப் பரீட்சையின்றி A/L பரீட்சைக்குத் தோற்றிய 1000 மாணவர்களுக்குரிய புலமைப் பரிசிலுக்கான விண்ணப்ப முடிவு திகதி 15.09.2001 வரை நீடிக்கப்பட்டுள்ளது. (C/18159)

| | | | |
|---|---|---|---|
| K.K.S. Road. Jaffna. | CSI Church, Atchuvely. | AGA Office Lane (Arulakam), Uduvil. | Director, UNIVAC. |



## INFOTECH.JAFF-2001

கணனிக் கண்காட்சி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மேற்படி கண்காட்சி தவிர்க்க முடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. கண்காட்சி நடைபெறும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

இயக்குநர்
(C/18202) IIS, யாழ்ப்பாணம்.



## TRRO நிறுவனம்



யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இளைஞர் யுவதிகளுக்காக அறிமுகப்படுத்தும்,

# பிரவாகம்



கணனி அறிவு மேம்பாட்டுத் திட்டம்

**ஆரம்பம் 25.09.2001**

**கணனி யுகத்தில் பயணிப்பதற்கான ஒரு திறவுச் சொல் பிரவாகம்**

TRRO நிறுவனம் ஆரம்பிக்கவுள்ள கணனி அறிவு மேம்பாட்டு பயிற்சி நெறித்திட்டத்தில் இணைந்துகொள்ள விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

நவீன **Pentium iii** கொம்பியூட்டர்களின் வசதியுடன் நடத்தப்படும் பயிற்சி நெறிகள்
- MS Word
- MS Excel
- MS Access
- MS Power point
- **Visual Basic**
- **PageMaker**
- **CorelDraw**

ஜி. சீ. ஈ. உயர்தர பரீட்சையைப் பூர்த்திசெய்த, யுத்தப் பாதிப்புக்களுக்கு உள்ளானவர்கள் பயிற்சி நெறியில் சேர்த்துக்கொள்ளப்படுவர்

பயிற்சி நெறிகளுக்கு பயிற்சிக்கட்டணம் அறவிடப்படமாட்டாது

**பிரவாகம்** கணனி அறிவு மேம்பாட்டுத் திட்டத்தில் இணைந்து பயிற்சி பெறவிரும்புவோர் எமது நிறுவனத்தில் விண்ணப்பப் படிவங்களையும், விவரங்களையும் பெற்று 20.09.2001ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்க வேண்டும்.

குறிப்பிட்ட தொகையினர் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

**பயிற்சிகள் நடைபெறும் இடங்கள்**
1. **106, 4th Cross Street, Jaffna.**
2. **Maruthanarmadam, Chunnakam.**

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:
**Chairman,**
**TRRO Computer Training Centre,**
***106, 4th Cross Street,***
***Jaffna.***

(C-18198)



## SUBRA(14)

*கல்வி நிறுவனம்.*
*சித்தன்கேணி.*

போட்டிப் பரீட்சை பயிற்சி வகுப்புக்கள்
1) எழுது வினைஞர்- பொதுவிவேகம், மொழிஅறிவு
2) கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தருக்குரியது பொதுவிவேகம், பொது அறிவு

*ஆசிரியர்:-* அ.குமாரவேல்

ஆரம்பம்:- 13.9.2001 (Thu-4.30)
*Note* - S.L.A.S. வகுப்புகளும் நடைபெறுகின்றன.
திங்கள் – வெள்ளி
5.30 - 8.00 p.m. (C/18186)



## ENGLISH SPOKEN & GRAMMAR

By:-BRITTO

புதிய பிரிவு 10-09-2001 இல் ஆரம்பமாகிவிட்டது.

நேரம்: 9 மணி (ப.நேரம்)
இடம்: கொக்குவில் (ஞான பண்டிதாவுக்கு அருகில்)
(திங்., புதன், வெள்ளி)

(C/18120)



## இனி உங்கள் திட்டம் ?

நீங்களே முடிவெடுங்கள்
ஆனால், நாங்கள் வழிகாட்டுவோம்.

## இலவச கணனி வழிகாட்டல் கருத்தரங்கு

எதிர்வரும் புதன், வியாழன், வெள்ளிக்கிழமைகளில் காலை 10.00 மணியிலிருந்து

அனுபவமும் திறமையும் மிக்க விரிவுரையாளர்களின் விரிவுரைகள், மற்றும் செய்முறை விளக்கங்களுடன் கூடிய இத்தொடர் இலவசக் கருத்தரங்கில்

1. கணனியின் அறிமுகம்
2. கணனியின் பிரயோகம்
3. *Internet & E mail*
4. கணனியை எவ்வாறு தெரிவு செய்வது
5. *Information Technology*
6. கணனித்துறைசார் வேலைவாய்ப்பு/ மேற்படிப்பு
7. இவற்றிற்கான செய்முறை விளக்கங்கள் *(Practicals)*

இக்கருத்தரங்கின் மூலம், நீங்கள் கற்க வேண்டிய கற்கை நெறியைத் தெரிவு செய்ய உதவுவதுடன் தமிழ் மொழிமூல குறிப்பு -ரைகளுடன் அவற்றுக்கான ஆலோசனைகளும் முன்வைக்கப்படும்.



ஆர்வமுள்ள அனைவரும் பயன் பெறலாம்

குறிப்பு: முற்கூட்டியே பதிவு செய்வதன் மூலம் தங்கள் வரவை உறுதிப்படுத்திக் கொள்ளவும்

*It is Easy Solution for your Future*

**STP** *In Two Years Service.*
*As a Leading Computer Education Center in Jaffna Peninsula.*
No:54A, Palaly Road, Kantharmadam, Jaffna.
TP: 2674. E-mail: stpedu@hotmail.com


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.09.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.